கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம்
25 JAN 2011

உ

சிவமயம்

# இந்து சாதனம்

HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : விரோதி ஞு ஆவணி மீ 26 ஆம் உ (1889)

web : www.hinduorgan.com
e-mail : editor@hinduorgan.com

புத்தகம் : 122
இதழ் : 05

விகிர்தி வருடம் தைத் திங்கள் 1 ஆம் நாள்
(15.01.2011)

பிரதி விலை
ரூபா. 50.00

## தில்லைக் காளி

சிவா - சரணன்

நான் பெரியவன்– நான்தான் பெரியவன் என்ற ஆணவத்தடிப்பு– தான் பெரியவன் என்பதை மற்றவர்களுக்குக் காட்டிவிட வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசையின் தூண்டுதலில் "நான் பெரியவனா? நீ பெரியவனா?" என அடுத்தவனிடம் விடுக்கப்படும் அகங்காரக் கேள்வி.

அடுக்கடுக்காகத் தொடரும் அடிதடிகள், சண்டைகள், சச்சரவுகள்!

சில்வாழ் நாட் சிற்றறிவுடைய மக்களுக்கிடையே இவை இடம்பெறுவதும் சில காலம் தொடர்ந்தபின் அடங்கிவிடுவதும் காலத்துக்குக் காலம் நாம் காணும் கசப்பான நிகழ்ச்சிகள் தாம்.

ஆனால், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், எங்கும் இருப்பவர் என்ற ஒப்புயர்வற்ற நிலையிலுள்ள முழுமுதற் கடவுளான சிவபெருமானும் அப்பெருமானிலிருந்து இம்மியும் வேறாகாத அம்பாளும்கூட இப்படியான பிரச்சினையிலும் தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்துள்ளார்கள் எனச் சொல்லப் படுகின்றதே! உண்மையா?

உண்மைதான்; அப்பனும் அம்பாளும் அத்தகைய தர்க்கத்தில் இறங்கினார்கள் என்பதை மறுக்க முடியாதுதான்.




அருள்மிகு தில்லைக்காளியம்மன் - அருள்மிகு தில்லை அம்மன் திருக்கோயில் முகப்புக்கோபுரம்

ஆனால், முக்கியமான வித்தியாசமொன்றை நாம் மறந்துவிடக் கூடாது. ஆணவத்தின் தூண்டுதலைவிட அருளுணர்வின் முனைப்பே அங்கே தலைதூக்கி நின்றது! பேருண்மை ஒன்றை இந்தப் பிரபஞ்சத்திலுள்ளோருக்குப் புகட்டவேண்டும் என்ற பெருநோக்குடன் அம்மையுடன் சேர்ந்து அப்பன் ஆடிய "நடன – நாடக"த்தைப் பார்ப்போமா? ஒரு தடவை கைலையங்கிரியிலே கைலாசநாதருக்கும் பார்வதி தேவிக்குமிடையே நடைபெற்ற உரையாடலில் "சிவன் பெரிதா? சக்தி பெரிதா?" என்ற கேள்வி கிளம்பி இருவருக்குமிடையே ஊடலை உருவாக்கிவிட்டது. "சிவன் இல்லையேல் சக்தி இல்லை" என்று ஈசன் உரைக்க, "சக்தி இல்லையேல் சிவன் இல்லை" என அன்னை மறுத்துரைக்க, "சிவமும் சக்தியும் ஒன்றே; ஒன்றோடு ஒன்று உறவு இல்லையேல் உலகில் எந்த ஒரு இயக்கமும் இல்லை என்ற மெய்ஞ்ஞானத்தை அம்மைக்கு மட்டுமல்ல அனைவருக்கும் உணர்த்தத் திருவுளங் கொண்டான் ஈசன்; கோர உருவங்கொண்ட காளியாகுமாறு பார்வதி தேவியாரைச் சபித்தான்.

"நான்தானே சக்தி, என்னையே சபிப்பதற்குரிய சக்தி ஈசனுக்கு எப்படி வந்தது?" எனச் சிந்திக்கத் தொடங்கினாள் அம்பாள். அடுத்த கணம் உண்மை புலனாகியது. சிவனும் சக்தியும் ஒன்றே என்பதை உணர்ந்துகொண்டவள், தான் செய்த தவறை நினைத்து வருந்தி ஈசனிடம் சாப விமோசனம் கேட்டாள்.

"உலகத்தின் நன்மையை உத்தேசித்துத்தான் கோர வடிவத்தை உனக்குக் கொடுத்தோம். இனிவரும் யுகங்களில் அரக்கர்களின் அக்கிரமங்களுக்குத் தேவர்களும் முனிவர்களும் இலட்சோபலட்சம் மனிதர்களும் உள்ளாகப் போகிறார்கள். அரக்கர்களின் அழிவுக்குக் கோப சக்தியே ஆயுதம். நீ காளியாக இருந்து அரக்கர் குலத்தை வேரோடு அழித்து, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் நல்லவர்களுக்கும் விமோசனம் அளித்து, தில்லைப் பதிக்குச் சென்று எம்மை நோக்கித் தவம் செய்ய வேண்டும் முனிவர்கள் பலரின் விருப்பத்திற்கிணங்க நாம் அங்கே ஆனந்த நடனம் ஆடுவோம். அவ்வமயம் உன்னைச் சிவகாமியாக ஆட்கொள் வோம்" எனத் திருவாய் மலர்ந்தார் சிவனார்.

அந்தக் கணமே காளியாகத் தோற்றம் கொண்ட பார்வதிதேவி ஊர்மாறி, உருமாறி, மகிடாசூரன் பண்டகாசுரன், தாரகாசுரன் போன்றவர்களை அழித்துத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஏனையோர்களுக்கும் அபயம் அளித்தாள். தில்லையை அடைந்து தில்லைக் காளியாகி, இறைவனுடன் ஐக்கியப்படும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தவம் செய்யத் தொடங்கினாள். ஆனால் அந்தத் தவத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவரைப்போல் பதஞ்சலிக்கும், வியாக்கிர பாதருக்கும், மூவாயிரம் முனிவர் கட்கும் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படும் விதத்தில் ஆனந்த நடனத்தை ஆடிக்கொண்டிருந்தார் பெருமானார். கோபத்தையே இயல்பாகக்கொண்ட காளி, கொதித்தெழுந்தாள். தில்லைவனத்தில் இருந்த தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தீங்கு செய்யத் தொடங்கினாள். அவர்களின் தவக் கோலங்களைச் சிதைத்து யாக குண்டங்களை அழித்தவள், தன்னுடன் ஆடற் போட்டிக்கு வருமாறு ஆனந்த நடேசரிடம் அறைகூவல் விடுத்தாள். ஆடற்கலை பெண்களுக்கே உரியது. ஆண்கள் அதை அபத்தமாக ஆடி அதன் மகிமையை அழிக்கக் கூடாது; உரிய முறையில் ஆடி அதில் வெற்றியடைய வேண்டும்.. ஆடற் போட்டியிலே **தான் தோற்றால்** அந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் விதத்தில், **தில்லையின்** எல்லைக்கே சென்று விடுவதாக உறுதி மொழி **கொடுக்கிறாள்.** சவாலை ஏற்றுக்கொண்டார் சபாபதி.

ஆரம்பமானது ஆடற்போட்டி.

*அதல சேடனார் ஆட அகிலமேரு மீதாட*
*அபினகாளி தானாட அவளோடு - அன்று*
*அதிரவீசி வாதாடும் விடையிலேறுவார் ஆட*
*அருகுபூத வேதாளம் அவை ஆட*
*மதுரவாணி தானாட மலரில் வேதனார் ஆட*
*மருவு வாணுளோர் ஆட மதியாட*

எனப் பின்னொருகால் அருண கிரியாரைப் பாடவைக்கும் விதத்தில் காளியம்பாளும் கனக சபேசனும் ஆடிக்கொண்டிருந்தனர். வெற்றி தோல்வியை யாராலும் தீர்மானிக்க முடியாதபடி நடனம் தொடர்ந்தது. நீண்ட நேரத்தின் பின்னர், துரித கதியிலே துள்ளி ஆடிய ஆட்டத்தின் விளைவாக, பெருமானின் குண்டல மொன்று காதிலிருந்து கழன்று விழுந்தது. தன் காலினாலேயே அந்தக் குண்டலத்தை எடுத்து, ஆட்டத்தை நிறுத்தாமல், அதன் கதியைக் குறைக்காமல், ஆட்டத்தின் ஓர் அம்சமாகத் தோன்றும் வகையில், காலைத் தன் தலைவரையிலே தூக்கி காதிலே அந்தக் குண்டலத்தை அணிந்துகொண்டான் இறைவன். அந்த அளவுக்குத் தன் காலையும் மேலே தூக்கி ஆடுவதற்குப் பெண்மையின் நாணம் காளியைத் தடுத்தது. அந்த ஊர்த்துவ தாண்டவத்தை ஆட அவளால் முடியவில்லை. தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. ஏற்கனவே தன்னை மதிக்காமல், இறைவன் நடனமாடியதால் ஏற்பட்ட கோபத்துடன், இப்பொழுது, தோல்வியினால் ஏற்பட்ட கோபமும் சேர்ந்து கொண்டது. அந்தக் கோபத்தை அடக்க முடியாமல், அதனால் ஏற்பட்ட வேகத்தையும் குறைக்க முடியாமல் தில்லையின் எல்லையில் அமர்ந்துகொண்டாள் அவள்.

கோபம் காரணமாக, இறைவனிடமிருந்து பிரிந்து சென்று தனியாக அவள் இருந்ததைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் ஐயமும் அச்சமும் அடைந்தனர். இருவரும் இப்படி வேறு வேறாகப் பிரிந்திருந்தால் இந்தப் பிரபஞ்சம் எப்படி இயங்கும்?

இறைவனிடமே சென்று முறையிட்டனர்.

காளி தேவியிடம் சென்றான் இறைவன் அரக்கர்களின் அழிவுக்காகவே உன்னைக் காளியாக உருவாக்கினேன். அவர்கள் அழிந்துவிட்டார்கள் இனி நீ, சிவகாமி என்னும் நாமதேயத்துடன் என்னுடன் இருக்கலாம்" என்றான்.

"அரக்கர்கள் அழிந்துவிட்டாலும், அகம்பாவமும் ஆணவமும் அடங்கவில்லையே " என்றாள் சினம் சிறிதும் குறையாமல்

"உன் சினம் நியாயமானதுதான். இந்த எல்லையில் நீ இருப்பதனால் உன் பெருமை ஒருபோதும் குறைவடையாது.

தில்லையில் நான் நிரந்தரமாகக் காட்சிதரும் சமயம், என்னை வணங்கும் பக்தர்கள், உன்னையும் வந்து தரிசிக்கின்றபோதுதான் பயனும் பக்தியும் முழுமை பெறும்" என்று இறைவன் கூறியபோதிலும் காளியின் சினம் தணியவில்லை.

மஹா விஷ்ணுவாலும் அவளைச் சாந்தப்படுத்த முடியவில்லை. வேத சுலோகங்களால் துதித்துச் சாந்தமடையும்படி பிரம்மதேவன் அவளை வேண்டினான். ஒரு வேதத்துக்கு ஒரு முகமாக நான்கு முகங்கொண்ட பிரம்ம சாமுண்டீஸ்வரியாய் உருக்கொண்டு தில்லையம்மனானாள்; பின்னர் சிவகாமியாக இறைவனுடன் இணைந்து கொண்டாள்.

அதனால் மகிழ்ச்சி அடைந்த இறைவன், அரக்கர்களைப் போன்றே அகம்பாவம் ஆணவம் சினம் முதலியவையும் விரோதிகள், தீயவர்கள், கொடிய வியாதிகள் முதலியவையும் மக்களுக்குக் கொடுமை விளைவிக்கும் என்றும், காளியாக இருந்து அவற்றை அழிக்க வேண்டுமென்றும் கல்வி, செல்வம், வீரம் போன்றவற்றைப் பிரம்ம சாமுண்டீஸ்வரியாக இருந்து மக்களுக்கு அருள வேண்டும் என்றும் அவளைக் கேட்டுக்கொண்டார்.

அதற்கு இணங்கினாள் அம்பாள்; நல்லவற்றைக் காக்கவும் அல்லவற்றைப் போக்கவும் உறுதிபூண்டாள்.

❆

தில்லைவனத்திலே மிகப் பழைய காலத்திலேயே தில்லைக்காளி தோன்றிய போதிலும் அவளுக்குரிய இப்போதைய கோயில் பல்லவ குலச் சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கன் என்பவனால் கி.பி. 13ஆம் நூற்றாண்டிலே தான் கட்டப்பெற்றது. ஆடல்வல்லானின் ஆலயத்துக்கு வடபால், சற்றுத் தொலைவில் மேற்குப் பார்த்த இராசகோபுர வாசலுடன் கோயில் காட்சியளிக்கின்றது.

கோபுரவாசலைக் கடந்து உள்ளே சென்றால் தென்பால் பிரசன்ன விநாயகரினதும் வடபால் மங்கையர் இருவர் சூழ இருக்கும் மயிலேறும் பெருமானினதும் கிழக்குப் பார்த்த சந்நிதிகளைத் தரிசிக்கலாம். மகாமண்டபத்திலுள்ள அலுவக வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் நான்கு முகங்களும் நான்கு திருக்கரங்களும் கொண்ட சாந்த சொரூபியாக, பிரம்ம சாமுண்டீஸ்வரியான தில்லையம்மனின் தரிசனம் கிட்டும். தாரகா சூரனை வதம் செய்து சினம் தணிந்த தில்லைக் காளி, ஈசனைத் தியானித்துக் கொண்டிருக்கும் கோலத்தில் அர்த்த மண்டபத்திற் காட்சி தருகின்றாள். இவ்வம்பிகையை வணங்கியபின் வடமேற்கில் தில்லைக்காளி, வெள்ளை வஸ்திரமும் குங்குமக் காப்புமணிந்து உக்கிரமூர்த்தியாகத் திகழ்வதைத் தரிசிக்கலாம். பின்னர் உற்சவ மூர்த்தி, அகோர வீரபத்திரர், துர்க்கை, சண்டிகேசுவரி, பைரவர் ஆகியோரை வணங்குகின்றோம்.

அம்பிகையின் அருளாணையின்படி பதஞ்சலி மாமுனிவர் வைதீக முறைப்படி தில்லைக்காளிக்கும் பிரம்ம சாமுண்டீஸ்வரிக்கும் தனித் தனியாக வகுத்த பூஜா விதிகளைப் பின்பற்றி நாள்தோறும் காலைசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என நான்கு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆடல்வல்லானைப் பூசிக்கும் தில்லைவாழ் அந்தணர்களே தில்லைவனமுடைய பரமேஸ்வரியையும் பூசிக்கும் பேறு பெற்றுள்ளனர்.

அபிஷேகத்திரவியங்கள் அனைத்தினாலும் பரமேஸ்வரி அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற, தில்லைக்காளிக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் மட்டும் நடைபெறுகின்றது. ஏனைய குளிர்ந்த திரவியங்களினால் அபிஷேகம் செய்தால் அவளுடைய கோபம் குறைந்து, கருணை வெள்ளம் பெருகிவிடும். கருணையினால் உலகின் அக்கிரமங்களையும் அநீதிகளையும் அழிக்க முடியாமற்போகும். எண்ணெய் ஊற்றி அவளுடைய கோபத்தை அதிகரித்தாற்றான், தீமைகளை அவள் நாசஞ் செய்வாள். அதேவேளை, அவளுடைய உக்கிர வெம்மையிலிருந்து பக்தர்களை காப்பதற்காகவே மஞ்சள் குங்குமத்தால் அவளுடைய திருமேனி முழுவதும் காப்பிடப்படுகின்றது. அவளுக்கு அணியப்படும் வெள்ளை வஸ்திரம், அவள் சாந்தமே உருவானவள் என்பதை அடியவர்களுக்கு உணர்த்துகின்றது. அத்துடன் சுமங்கலிகளுக்கு விதவைக் கோலம் ஏற்படாமல் தடுப்பதற்காக, தானே அந்தக் கோலத்தைத் தாங்கி அருள்கின்றாள் என்றும் நம்பப்படுகின்றது.

ஆண்டுதோறும் வைகாசி மாத அமாவாசைக்கு முந்திய சஷ்டியில் காப்புக் கட்டி பத்து நாள் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. வைகாசியில் தில்லையம்மனுக்குத் தேர் உற்சவம் நடந்தாற்றான், ஆனி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் நடராஜப் பெருமானுக்குத் தேர் உற்சவம் நடைபெறும் என்ற ஆழமான நம்பிக்கை, தில்லையம்மன் தேருற்சவத்தின் மகிமையைப் புலப்படுத்துகின்றது.

ஒரு தடவை தில்லையம்மனின் தேருற்சவத்தின்போது தேர்ச் சக்கரம் மண்ணிற் புதைந்து, தேர் நகர முடியாத நிலை ஏற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில், சேனைத் தலைவர் என்ற மக்கட் பிரிவினர் சிலர், தாமாக முன்வந்து தம் தலைகளை வெட்டிப் பலிகொடுத்தனர். தேர்ச்சக்கரம் தானாகவே மேலெழும்பி நகரத் தொடங்கியது. அந்தச் சமூகத்தவரின் குடும்பத்தில் யாராது மரணமடைந்தால் அவர்களின் ஆன்மா சாந்திக்காக இக்கோயிலின் தீர்த்தமும் திருமாலையும் கொடுக்கப்படும் வழக்கம் இன்றும் உண்டு.

ஒவ்வோராண்டும் மாசிப் பூரணையின்போது காலை ஆறு மணிக்குச் சந்திரனும், பூரணை கழிந்த இரண்டாம் நாள் மாலை ஆறு மணிக்கும் ஆறேகால் மணிக்குமிடையில் சூரியனும் தம் வெள்ளிக் கதிர்களால் அம்பாளைத் தழுவி வழிபடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்கள். இந்த வேளைகளில் அடியார்களும் இத்திருக்காட்சியைக் கண்டு வணங்கலாம்.

இறைவனின் கண்களாகத் திகழ்கின்ற அவர்களே இங்குள்ள அம்பிகையை வழிபட்டுய்யும்போது, சாதாரணர்களான நாம் அவர்களைப் பின்பற்றாமலிருக்க முடியுமா?

"என்னைத் தரிசிப்பவர்கள் உன்னையும் தரிசித்தாற்றான் என் தரிசனத்தின் பூரண பலனை அடைவார்கள்" எனத் தில்லைக் காளிக்குத் தில்லை நடராஜப்பெருமான் கொடுத்த அருள் விளக்கத்தை நெஞ்சிற் பதித்துக்கொண்டே தில்லை யாத்திரையைத் தொடங்குவோம்.

**இறைவனே எம்மை என்றும் ஆள்கின்றான் என்ற உண்மையை மனத்தில் நன்கு பதித்து; இளமை தொடக்கம் இறுதிமூச்சு விடும்வரை பயனுள்ள வாழ்வு- மற்றவர்க்கும் பயன் தரும் வாழ்வு வாழவேண்டும். பெரியவர்கள் மட்டுமல்லாமல் இளைஞர்களும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.**

# சமயம் ஒரு வாழ்வியல் -25

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்க்கையைப் பற்றித் தெளிவாக அறிய எல்லோரும் ஆசைப்படுகின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வு எப்படியிருக்கும் என்பதைப் பலர் பலவாறு விளக்கவும் முயன்றுள்ளனர். மணிவாசகர் மனித வாழ்வியலை விளக்கும்போது ஓர் உவமை மூலம் விளக்கியுள்ளார். அதனை எல்லோரும் நன்கு விளங்கிக்கொள்ளலாம்.

*"கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி*
*வம்பு பழத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே*
*நம்புமென் சிந்தை நணுகும் வண்ணம் நானணுகும்*
*அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே"*

கொம்பில் அரும்பு தோன்றும். அந்த அரும்பு பின்னர் மலராகும் மலரானது பின்னர் காயாகும். காய் பின்னர் கனியாகும் அந்தக் கனியும் பின்னர் உதிர்ந்து விடும். இக்காட்சியை எல்லோரும் கண்டிருப்பர். ஆனால் இக்காட்சியைத் தம்முடைய வாழ்வியலோடு சேர்த்து யாரும் பார்ப்பதில்லை. இயற்கை நிலையில் ஒரு அரும்பினுடைய வாழ்வு எப்படியோ அப்படித்தான் மனித உடம்பின் தோற்றமும் மறைவும். ஆனால் மனித உடம்பும் முதிர்ச்சியடைந்து எதற்கும் பயன்படாது இருப்பது நன்றன்று. முதுமைவரையும் இறைசிந்தனையுடன் இருப்பின் மனித வாழ்வும் அர்த்த முள்ளதாகிவிடும்.

இதனையே மணிவாசகர் தனது பாடலில் விளக்கியுள்ளார். தன்னுடைய மனத்தைத் தானே வழிப்படுத்தியுள்ளார். எம்முடன் வாழ்பவர் எமக்கு முன்னே வாழ்ந்தவர்கள் எனப் பலரது முடிவை நாம் நேரில் காண்கின்றோம். முதிர்ச்சிவரை பயனற்ற வாழ்வு வாழ்ந்தவர் பலர். ஆனால் மணிவாசகர் தனது வாழ்வு பயனுள்ளதாக அமையப்பாடுபடுகிறார். அதற்கென ஒரு வழியையும் மேற்கொள்கின்றார். தன்னம்பிக்கையுடைய மனமும் தானும் சென்றுசேர என்றுமே எளிமையாக விளங்கும் இறைவனை வழிபடுகின்றார். அழகு மிக்க தில்லையிலே உறையும், என்றும் மகிழ்ச்சிக் கோலத்துடன் விளங்கும் தில்லை வாழ்சிவன் திருவடிகளையே இறுக்கமாகப் பற்றிக்கொள்கிறார்.

பக்திநிலையில் இறைவனைப் பற்றிய எண்ணத்தோடு வாழும் அடியார் வாழ்வியல்தான் மனிதருக்கு மகிழ்வைத்தரும். அடியவர் பலருடைய வரலாறு இதனை நன்கு விளக்கியுள்ளது. உலக வாழ்க்கையில் எல்லாச் சிறப்புக்களையும் செல்வங்களையும் பெற்றிருந்தாலும் முழுமையான மகிழ்ச்சி கிடைப்பதில்லை. மேலும் இளமையில் இவற்றை அடைய வேண்டும் என்ற முயற்சியிலேயே வாழ்வு நடக்கிறது. மணிவாசகர் இத்தகைய வாழ்வின் தேட்டத்தில் அனுபவப்பட்டவர். அதனால் பல துன்பங்களையும் எதிர்கொண்டவர். எனவே அத்துன்ப நிலையிலிருந்து விடுபடும் தேடலை மேற்கொண்டார். இறைவன் திருவடிகளை நினைந்து வாழ்வதே நிலையான இன்பம் என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். அதை எல்லோருக்கும் எடுத்து உரைத்துப் பல பாடல்களைப் பாடினார். சமயம் மனித வாழ்வைப் பக்குவப்படுத்த வல்லது என்பதை எல்லோரும் உணரவைத்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என வள்ளுவப் பெருந்தகை கூறினார். மணிவாசகரும் இந்த நிலையில் வழிபடப்படும் சிறப்பைப் பெற்றார். இறைவனே எம்மை ஆள்கிறான் என்ற உணர்வோடு வாழும்போது எம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள்ளலாம். சைவசமய வழிபாட்டு நெறிகள் யாவும் மனித வாழ்வியலைச் சீர்மியம் செய்வனவாகும். ஐம்புலன்களையும் அடக்கும் ஆற்றலை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். எம்மை நாம் தாழ்த்திக் கொண்டு பணிசெய்யும்போது அது இறைகுணமாகிவிடுகிறது. பிற உயிர்களிடம் அன்பு செலுத்தும் மனப் பக்குவம் வந்துவிடு கின்றது.

இன்றைய இளந்தலைமுறையினர் எமது சமயம் காட்டும் இந்த வாழ்வியலை இலக்காகக் கொள்ள வேண்டும். பிற உயிர்களிடம் அன்பு செலுத்துவதே வாழும் முறைமையென நவீன கவிஞன் பாரதியும் பாப்பாப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். மணிவாசகர் இளமைக் காலத்தின் நிறைவுக் கட்டம் பக்திநிலையால் பரவசப் படும் தன்மை பெற்றிருந்தது. 32 வயது மட்டுமே வாழ்ந்த அவர் பாடல்களில் பொதிந்துள்ள வாழ்வியலனுபவம் எல்லோருக்கும் மனித வாழ்வியல் பற்றிய தெளிவைக் கொடுக்கவல்லது. எனவே அத்தகையதொரு வாழ்வை எல்லோரும் இலக்காக்கிக்கொள்ளல் வேண்டும்.

திருக்கோயிலை மையமாக வைத்து ஒரு வாழ்வில் மீண்டும் தொடக்கம் பெற வேண்டும். இளமையும் முதுமையும் ஒருங் கிணைந்து இறைபணியில் ஈடுபடுவது சமூகநடுநிலைமையை உருவாக்கும். ஏற்றம் இறக்கம் இல்லாத சமநிலையான வாழ்வு ஒன்றையே இது கொண்டுவரும். மனித வாழ்வு சங்கிலித் தொடர் போலக் காலக்கடப்பில் ஒற்றுமையாகக் கைகோத்து வழி நடக்கும். அப்போது மன வடுக்கள் மறைய மனதிலே பக்தி உணர்வே பரவ மனிதம் பொலிவுடன் திகழும்.

# தாய் தாய்மை தாயன்பு

- நயினை நா. யோகநாதன், B.A.

ஓடு, கந்தை, மரத்தடி, தனிமை, எல்லா உயிர்களிடத்தும் அன்பு, என்ற ஐந்து இலக்கணங்களை ஒரு துறவியானவர் கொண்டிருக்க வேண்டும். இன்று ஒரு துறவியைக்கூட நாம் அவ்வாறு காணமுடியாது. ஆனால் உண்மையான துறவிகளாய் வாழ்ந்த ஆதி சங்கரர், பட்டினத்தார் இருவரும் அனைத்தையும் துறந்தவர்கள். துறவுக் கோலத்திற்கான இலக்கணத்தை யதார்த்தமாக்கியவர்கள். ஆனால் தாயின் உறவை மட்டும் எதன் பொருட்டும், எவர் பொருட்டும் துறக்க மறந்தவர்கள். பட்டினத்தாரைப் போன்று கடுமையாகத் துறவு நெறியை கடைப் பிடித்தவர்கள் வேறு யாருமில்லை. பிச்சைப் பாத்திரம் ஏந்தி, பசிக்கு உணவு தேடி, வீடு வீடாகக் கையேந்தி, யாசித்த துறவிகளைப் போன்றவரல்லர் பட்டினத்தார். "இருக்கும் இடம் தேடி என்பசிக்கே அன்னம் உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன். பெருக்க அழைத்தாலும் போகேன் அரனே என் தேகம் இளைத்தாலும் போகேன் இனி" என்று வைராக்கியம் பூண்டு, நம் மண்ணில் வாழ்ந்து வலம் வந்தவர் பட்டினத்தார். சித்தர்களுள் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கும் தாயுமானவரே, பட்டினத் தாரின் பற்றற்ற பச்சை வாழைமட்டையில் தன் தாயின் உடலத்தைக் கிடத்தி, ஞானத் தீயால் அதனை எரியச் செய்தார். தனது அன்னையின் மணிவயிற்றை "நான் குடியிருந்த கோவில்" என்று வர்ணித்தார் பட்டினத்தார். எவ்வளவு அழகாகவும், அர்த்தமாகவும், சொல்லி விட்டு நான் குடியிருந்த வீட்டுக்கு கொள்ளி வைக்கிறேனே என வேதனைப்பட்டார் அவர். எனக்கென்ன மனக்கவலை, என் தாய்க்கன்றோ தினம் தினம் என் கவலை. என்பதே இவரின் அடிமனதின் ஆன்ம கீதமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

இதே போல் ஆதி சங்கரர் சந்நியாசியானபோது அவரது தாயாராகிய ஆர்யாம்பிகை, தான்பெற்றெடுத்த ஒரே ஒரு பிள்ளையைத் துறந்து தனிமரமாக எப்படி வாழ்வது என்று அழுது புலம்பினாள். மரணத்தின் பிடியில் அகப்பட்டு மூச்சு அடங்கும் போது, மகனுடைய மடியில் தலை சாய்க்கும் வரம் வேண்டினாள் அந்த அன்னை. "தாயே நான் எங்கிருந்தாலும் உன் மரண காலத்தில் வந்து மடிசுமப்பேன்" என்று சத்தியம் செய்தார் சங்கரர். காலம் வேகமாக ஓடியது. ஒருநாள் சிருங்ககிரியில் சீடர்கள் நடுவே

> "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்கின்றார் ஔவைப்பிராட்டியார். "எல்லா இடங்களிலும் தன்னால் நேரில் இருக்க முடியாததால் இறைவன் தாயைப் படைத்தான்" என்பது யூதர்களின் பொன்மொழி. "உள்ளே உயிர் வளர்த்து, உதிரத்தால் பால் கொடுத்து, அள்ளி இடும் போதெல்லாம் அன்பையே சேர்த்தளித்து, தொல்லை தனக்கென்றும் சுகமெல்லாம் மகட்கென்றும் சொல்லாமற் சொல்லி நிற்கும் தேவதை தான் தாய்" என்கின்றார் கவிஞர் கண்ணதாசன். இவற்றின் இயல்பினை விரிவாகவும் இனிய விளக்கமாகவும் உள்ள இந்தக் கட்டுரையின் முதற் பகுதி 2010 மார்கழி "இந்து சாதனம்" இதழில் வெளிவந்தது.

கடுமையான துறவுநிலையைக் கூறும்போது "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறத்தல் அரிது அரிது" என்று வியப்போடும், பரவசத்தோடும் பாடிப் பரவுகின்றார். உலகப் பற்றுக்கள் அனைத்தையும், ஒரு நொடியில் உதறித் தள்ளிவிட்ட பட்டினத்தா ராலும், உதறித்தள்ள முடியாத உறவாக இருந்தது தாயின் உறவு. கோவணம் தரித்துத் துறவுக் கோலத்தில் வீட்டில் இருந்து வெளியேறியபோது, அழுது துடித்த உறவுகளுள், அன்னையிடம் மட்டும் பட்டினத்தார் ஓர் உறுதிமொழி அளித்தார். தாய் மரணத்தை சந்தித்த செய்தி வந்து சேர்ந்தால், தானே ஓடிவந்து ஈமக்கடன் ஆற்றுவதாக வாக்களித்து விடைபெற்றார். தெரு மண்ணிலும், குப்பை மேட்டிலும், காடு மேடுகளிலும் அரண்மனை வாழ்வைத் துறந்து அலைந்து திரிந்து பட்டினத்தாரின் காலம் நடந்தபோது, ஒருநாள் தன்னைப் பெற்றெடுத்த தாய் கண்மூடிய செய்தி வந்து சேர்ந்தது. அன்னையிடம் அளித்த வாக்கை நிறைவேற்ற அவர் மயானம் நோக்கி விரைந்தார். அங்கு சுற்றத்தாரால் அடுக்கி வைக்கப் பட்டிருந்த சிதை எரிக்கும் விறகுகளை எல்லாம் அகற்றிவிட்டு, சங்கரர் அமர்ந்திருந்த போது, அன்னையினுடைய மரணப்படுக்கை மனதில் நிழலாடியது. உடனே வீட்டை நோக்கி விரைந்து நடந்தார். அன்னையின் வீட்டை அடைந்ததும் முன்பு சொன்னதுபோல், தாயின் தலையை மடியில் சுமந்தார். மரண வாசலை நோக்கியிருந்த ஆர்யாவின் ஆன்மா அமைதி பெற்றது. உயிர் பிரிந்தது. ஊரும் உறவும் கூடியது. உடனே, "என்னை ஈன்ற அன்னைக்கு நானே என் கரங்களால் இறுதிக் கடன் முடிக்க விரும்புகின்றேன். நீங்கள் விலகி நின்று உதவுங்கள்" என்றார் சங்கரர். துறவிக்கு உறவு ஏது என்றும், சந்நியாசம் பெற்றவன் பிரேதக் கடமை செய்ய முடியாது என்றும் வாதிட்டார்கள். சனாதன தர்மம் இதனை அங்கீகரிக்காது என்று உறவுகள் மறுத்தது. தர்மத்தை மீறினால் தள்ளி வைத்து விடுவோம் என்றும் மிரட்டியது. இவற்றிற்கெல்லாம், சங்கரர் வளைந்து கொடுக்கவில்லை. தன்னைப் பெற்ற அந்த தாயினை தன்னந்தனியனாய் தோளில் சுமந்து சென்று வீட்டின் கொல்லைப் புறத்தில் தாயின் சடலத்தை இறக்கிவைத்து, "அக்கினி பகவானே!" என விளித்து, "சந்நியாச தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நான் உனக்கு இதுவரை அவிர்ப்பாகம் அளித்ததில்லை. இன்று →

என்தாயின் புனித உடலை உனக்கு ஆகுதியாய் அளிக்கிறேன், ஏற்றுக்கொள்" என வேண்டி நின்றார். உடனே அன்னை ஆர்யாம்பிகையின் உடலை நெருப்புச் சூழ்ந்தது. அன்னையின் தாகமும் சங்கரரின் சத்தியமும் அங்கே நிறைவேறின.

சனாதன சந்நியாசிகள் உறவுகளைத் துறந்தவர்கள், இறந்தவர்களின் உடலுக்கு ஈமக்கடன் செய்தலாகாது என்று, சாத்திரங்கள் விதித்த எல்லைக்கோட்டை மீறினார் சங்கரர். ஒவ்வொருவரும் இறுதிநாள் வரை எந்த நிலையிலும் துறக்கக் கூடாத உறவு தாயின் உறவு என்பதை உலகுக்கு அழுத்தமாக அவர் உணர்த்தி நின்றார். சாஸ்திர விதிகளை மீறி துறவு நிலையில் நின்ற படியே தன் தாயின் சடலத்திற்கு ஈமக்கடன் செய்து இந்து தர்மத்தில் தாய்க்குரிய தனிப்பெரும் இடத்தை நிலை நிறுத்தினார். தாயின் அன்பை நினைந்து, நினைந்து உள்ளம் உருகி, உருகி, ஐந்து பாடல்களைப் பாடி, தன் சோகம் முழுவதையும் இறக்கி வைக்கின்றார் சங்கரர். இவ்வைந்து பாடலும் வட மொழியில் "மாத்ருகா பஞ்சகம்" என்ற பெயரில் சிறப்புற்று அமரத் துவம் பெற்றுவிட்டன. தாய்ப்பாசத்தின் முழு வீச்சையும் அப்பாடல்களில் நாம் காணலாம்

பட்டினத்தாரோ பச்சை வாழைமட்டையில் தாயின் உடலத்தை வைத்து ஞானாக்கினியால் எரியச் செய்து, ஒவ்வொரு மனிதனுமே பாசத்தால் ஆற்றமாட்டாது தேம்பித் தேம்பி அழும்படியான பத்துப் பாடல்களைப் பாடிவிட்டுப் போயுள்ளார். உலகத்திலே வேறு எந்த இலக்கியத்திலும், தாயின் பாசத்தையும் தியாகத்தையும் விளக்கி நம்மை உருகவைக்கும் பட்டினத்தாரின் பத்து பாடல்களையும் விஞ்சி நிற்கும் படைப்பு இருக்கவே முடியாது. ஆதி சங்கரர் தன் தாய்க்காக நெஞ்சுருகிப் பாடிய "மாத்ருகா பஞ்சகத்தின்" ஒரு பாடலில் அம்மா நீ எப்பொழுது என்னைப் பார்த்தாலும், பாசம் ததும்பிப் பெருக, முத்தே ! மணியே ! என் கண்ணே; ராஜாவே ! செல்வமே ! என்றெல்லாம் இதயம் நிறைந்து வாழ்த்தி உன்னுடைய இனிமையான இதழ் திறந்து கொஞ்சுவாயே ! அன்னையே; விதம் விதமாய் என்னை வாழ்த்தி மகிழ்ந்த அந்த மணி வாய்க்கு இன்று அரிசியை அள்ளி இடும் நிலையில் நான் நிற்கின்றேனே என்று பரிதவித்துப் புலம்புகின்றார்.

பட்டினத்தடிகளும், ஆதி சங்கரரைப் போலவே, தேனே! அமுதமே, செல்வதிரவியமே என்று கெஞ்சி அழைத்த வாய்க்கு அரிசியைத்தானே என்னால் இட முடிந்தது என்று கூறி, வகை, வகையாய், அன்னைக்கு வரிசையிட்டுப் பார்த்துநான் மகிழ வில்லையே. என்று கண்ணீர் வழியக் கையறு நிலையில் புலம்புகின்றார். சங்கரர், காலத்தால் முந்தியவர். பட்டினத்தடிகள் காலத்தால் பிந்தியவர். இருப்பினும் தாயைப் பற்றிய நோக்கு இருவருக்கும் ஒரே பாசப் பாதையில் பயணித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இதயத்தை இரணமாக்கி கண்களில் கண்ணீரை வரவழைக்கும் பட்டினத்தாரின் பாடல்களை இன்றும் நம் மரண வீடுகளில் மனமுருகிப் பாடக் கேட்கின்றோம். "ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல. இங்கு யாரும் சதமல்ல" என்று வாழ்க்கை நிலையாமை குறித்து வலியுறுத்தியவர், தாயின் இழப்பை மட்டும் தாங்கமுடியாமல் நொந்து, நொந்து, மனம் வெந்து, வெந்து, அழுகின்றார். "சுகதுக்கம் அற்று விட்டேன்" என்றவரால் தாயின் இழப்பில் துக்கம் கொள்ளாமல் இருக்க முடியவில்லையே! அது ஒன்றுதான் அவருக்கிருந்த அறுபடமுடியாத தாய்ப் பாசத்தின் தாகம் எனலாம்.

தாயின் தியாகம் அளவிடமுடியாதது. தன் கண்களை விளக்காக்குகிறாள், கைகளைத் தொட்டிலாக்குகிறாள், இரத் தத்தைப் பாலாக்குகிறாள், வேண்டுமானால் தன் உயிரையும் தியாகம் செய்ய முன்னிற்பாள். தாயன்பு போன்ற கலப்படமற்ற தூய அன்பு, இந்த உலகில் வேறு எதுவும் இல்லை. பரிபூரணமான அன்பையும் தன்னலமற்ற உழைப்பையும் அம்மா ஒருத்தியிடம் மட்டுமே பார்க்க முடியும். உள்ளே உயிர்வளர்த்து உதிரத்தால் பால்கொடுத்து அள்ளி இடும்போதெல்லாம் அன்பையே சேர்த் தளித்து, தொல்லை தனக்கென்றும், சுகமெல்லாம் மகட்கென்றும், சொல்லாமற் சொல்லிநிற்கும் தேவதைதான் தாய். உயிர்களின் நலனுக்காக முற்றாகத் தன் உருவத்தையே அழித்து மழையாகப் பெய்யும் மேகம் போன்றவள் தாய். பண்பு தெரியாத மிருகம் பிறந்தாலும் பால் தரும் கருணை அது. பிறர் பசித்த முகம் பார்த்து பதறும்நிலை கண்டு, பழம் தரும் சோலை அது. இருக்கும் பிடி சோறு, தனக்கென்று எண்ணாமல் கொடுக்கின்ற கோயில் அது. தினம் துடிக்கும் உயிர் கண்டு, தோளில் இடம் தந்து, அணைக்கின்ற தெய்வம் அது என்று அழகாகப்பாடி உணர்வு பூர்வமாக எம்மைச் சிந்திக்க வைக்கிறார், கவிஞர் கண்ணதாசன் அவர்கள்.

மகவுக்காக வாழ்க்கை இன்பங்களை எல்லாம் துறக்கத் தயங்கமாட்டாள் ஒரு தாய். கடும்பசி நேரத்தில் ஒரு கவளம் அன்னம் கிடைத்தால் அதனை மகவுக்கு அன்போடு ஊட்டிவிட்டு, தான் பட்டினி கிடப்பது தான் தாயின் தாய்மை உணர்வு. தம் மக்கள் தம்மை மதிக்கிறார்களோ போற்றுகிறார்களோ என்றெல்லாம் எதிர்பார்க்காமல், கைமாறாக தம்மேல் திரும்ப அன்பு செலுத்துகின்றார்களோ என்றும் கருதாமல், மக்களின் நலன் ஒன்றையே பெரிதெனக் கருதுவது தாயின் இயல்பு, தான் எக்கேடு கெட்டாலும், எக்கதிக்கு ஆளானாலும் பரவாயில்லை. தன் மக்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக, வாழ்ந்தால் போதும் என்பது, தன்னலமற்ற தாயன்பு. மக்களுக்காக, பெற்றெடுத்த தாய் ஒருத்தி, தன் சுகங்களையும் நலன்களையும் அடியோடு இழந்து, அந்த இழப்பிலேயே இன்பம் காணுகின்றாள் என்றால் அத் தாய்மை அன்புக்கு ஈடாக நாம் எதையும் கூறிவிட முடியாது. பெற்றவள் என்ற பெரும் சிறப்புக்கும் மரியாதைக்கும் உரியவளாக உலகம் முழுவதிலும் திகழ்பவளும் மதிக்கப்படுபவளும் அன்னையாகத் தான் இருக்கின்றாள். இது என்றைக்குமே மாற்றமடையப் போவதில்லை.

அன்புணர்ச்சி இல்லாத வெறும் வரட்டுத்தனமான அறிவைத் தரும் கல்வியினால் பண்பாட்டுப் பயிர் செழிக்காது. வாழ்க்கை ஒழுக்கத்தை கற்றுத்தராத கல்வியினால் எதுவித பயனுமில்லை. தன்னைப் பெற்றெடுத்த தாய்க்கும் தந்தைக்கும் சேவை செய்யாதவன், தான் பிறந்த மண்ணுக்கும், மக்களுக்கும் எந்த நற்பயனையும் தந்துவிடப் போவதில்லை. பத்துமாதம் கருவில் சுமந்தவளையே, தனக்குச் சுமையாகக் கருதுபவன் இந்த உலகில் நடமாடுவதற்கே அருகதையற்றவன். உருக்கொடுத்து உதிரத்தைப் பாலாக்கி வளர்த்தவளையே உதறித் தள்ளிவிட்டுச் செல்லும் உள்ளம் கொண்ட ஒவ்வொருவனும் மனித வடிவில் உலவும்

→

விலங்கன்றி வேறில்லை. இந்நிலை மாறவேண்டும். தாய்ப்பாலில் வளர்ந்து தந்தையின் வியர்வையில் படித்து வெளியுலகு சென்று பணியாற்றி, பணம் சேர்க்கும் இன்றைய இளைய தலைமுறையினர் பலர், உலகின் இன்பங்களைப் பட்டியலிட்டு அதை அனுபவிக்க துடித்துக் கொண்டிருக்கும் அவசரத்தில், ஆதரவற்று நிற்கும் பெற்றோரைப் புறக்கணித்து விடுகின்றனர். கும்பகோணத்தில் தாயைப் பிச்சை எடுக்கவிட்டு விட்டு, காசியில் போய் கோ தானம் செய்யும் மகன்மாரும் இன்று உளர். அவ்வாறானவர்களை கடவுள் ஒருபோதும் கண்திறந்தே பார்க்கமாட்டான். பெற்றோருக்குச் சாப்பாடு கொடுக்காமல், உபசரிக்காமல் புறக்கணித்தவன் தன் வாழ்க்கையில் ஒரு போதும் உயர்ந்ததாகவோ, மனநிம்மதியோடு வாழ்ந்ததாகவோ வரலாறு இல்லை என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

உலகத்தில் எல்லா உறவுகளையும் துறந்துவிட்ட துறவிகள் கூட, எந்த நிலையிலும் துறக்க முடியாத உறவு தாயின் உறவு. உலகப் பற்றுகளில் இருந்து முற்றாகவும் முழுமையாகவும் விடுபட்டு துறவுக்கோலம் பூண்டவர்களுக்கு, பூர்வாச்சிரமம் இல்லை என்கிறது சனாதன தர்மம். ஒரு துறவியை, அவரைப் பெற்றெடுத்த தந்தை சந்திக்க நேர்ந்தால் அத்தந்தைதான் அந்தத் துறவியின் தாள்களில் பணிந்து விழவேண்டும். ஆனால் அத் துறவி தன்னைப் பெற்றெடுத்த தாயைக் காணநேர்ந்தால் அவளது பாதங்களில் அத்துறவிதான் வீழ்ந்து வணங்கவேண்டும். இங்கே தந்தைக்கு இல்லாத மதிப்பை இந்து தர்மம் தாய்க்கு வழங்கி இருக்கின்றது. இது சிந்திக்க வேண்டியதும், சிந்தித்து தெளிவு பெற்று, வந்திக்க வேண்டியதுமாகும்.

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்றும், "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்றும் தாய் தந்தையரின் தனித்துவத்தை ஆன்றோர் அழகாக எடுத்துக்கூறிச் சென்றார்கள். "அன்னையைப் போலொரு தெய்வமில்லை அவர் அடிதொழ மறப்பவர் மனிதரில்லை" என்று வரும் உணர்வுபூர்வமான பாடல்களெல்லாம் நமக்குப் பாடம் புகட்டும் உயிரோட்டமான பாடல்களாகும். "அம்மா என்றழைக்காத உயிர் இல்லையே. அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே" என்ற கவிஞர் வாலியின் வைர வரிகள் எப்போதும் வேதமந்திரமாய் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும். அப்போது தாய்ப்பாசம் நம் உயிர்மூச்சிலும், உதிரஓட்டத்திலும், கலந்து உணர்வூட்டிக் கொண்டிருக்கும் அந்நிலை ஏற்படும்போது நாம் ஒவ்வொருவரும் தாய்ப்பாசம் உள்ளவர்களாய் வாழ்வோம். எமது வாழ்வு வளம் பெறுவதற்கு அது ஓர்இயக்கு சக்தியாக என்றும் இருக்கும். "மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்" என்பது உலகநாதரின் உலக நீதிப் பாடலாகும். அதனை நாம் எவ்வாறாக கடைப்பிடிக்கவேண்டும், நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு மகவின் தாய்ப்பாசத்தின் தாகத்தை உணர்த்தி நிற்கும் பாடலடி

*"இறந்தால் மீண்டும் பிறந்தால் இடம்தா உன்தன் மடிமீது*
*இருந்தால் உன்தன் மகனாய் இருக்கும் வரம்தான் வேண்டும் புவிமீது"*

என்ற இந்த பிரார்த்தனையோடும் வேண்டுதலோடும் பெற்றெடுத்த தாயின் பேரன்பினையும், தியாகத்தினையும், நினைந்து நினைந்து உணர்ந்து தெளிந்து வாழ்வோமாக, தாயில் இறைவனையும், இறைவனில் தாயையும் மணிவாசகன் கண்டான். "தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்பதே அவரின் வாக்கு இதுவே தாய்ப்பாசத்தின் எல்லை. என்பதை உணர்வுபூர்வமாக நாம் எல்லோரும் சிந்திப்போமாக.

*"அன்னையாய் நின்று அனைத்துமே தந்து*
*தன்னையே உருக்கிய தாயடி சரணம்".*

## இந்துசாதனம் – சந்தா விபரம்

**உள்நாடு**

தனிப்பிரதி : 50/–

ஆண்டுச் சந்தா : ரூபா 600/–

**வெளிநாடு**

| | | |
|---|---|---|
| Australia (AU$) | - | 35 |
| Europe | - | 25 |
| India ( Indian Rs) | - | 500 |
| Malaysia (RM) | - | 50 |
| Canada ($) | - | 35 |
| UK (£) | - | 15 |
| Olher (US$) | - | 25 |

**காசோலைகள்**

Saiva Paripalana Sabai
Account No. 1090946
என்று எழுதப்பெறுதல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

கௌரவ முகாமையாளர்
**இந்துசாதனம்**
இல.66, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

நமது இந்துசமய மரபில் முதல் வணக்கத்துக்குரியவர் விநாயகர். அர்ச்சனை செய்யச் செல்பவரும் முதலில் விநாயகருக்கு அர்ச்சனை செய்தபின்னரே ஏனைய மூர்த்திகளுக்கு அர்ச்சனை செய்ய விரும்புவர். அவ்விதம் முதல் தெய்வத்திடம் போய் முதல் அர்ச்சனை செய்யத் தொடங்கும்போது ஒலிக்கும் முதல் வார்த்தை, ஆனந்த வாழ்வின் அடிநாதத்தை நமக்கு இலகுவாக எடுத்துச் சொல்கிறது.

*"ஓம் சுமுகாய நம"*

'ஓம்' என்னும் பிரணவம் அனைத்துக்கும் முதற்பொருளாய், வேத விளக்கமாய், விந்துவும் நாதமுமாய், ஓங்காரமாய் இங்கு ஆரம்பிக்கிறது. இது அர்ச்சனை மந்திரங்கள் அனைத்திலும் ஆரம்ப ஒலியாக இருக்கம். 'நம' (நமஹ) என்ற சொல் வணக்கம் எனும் பொருளில் ஒவ்வோர் அர்ச்சனை நாமத்தின் இறுதியிலும் ஒலிக்கும். 'சுமுகாய' என்பது சுமுக என்ற சொல்லின் நாலாம் வேற்றுமை வடிவம். "சுமுகனுக்கு வணக்கம்" என்பது இந்த முதல் நாமத்துக்குப் பொருள். சுமுகன் என்பது விநாயகருக்கு ஒரு பெயர்.

## அர்ச்சனை மந்திரங்களிற் காணப்படும்

# அற்புதக் கருத்துக்களும், ஆனந்த இரசனையும் 2

**வித்யாபூஷணம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா**
B.A. (Hons) **(கோப்பாய் சிவம்)**

'சு' என்ற அடைமொழி நல்ல, சுபமான, அழகிய என்ற கருத்துக்களைத் தருவது. எனவே "நல்ல முகத்தை உடையவர்" என்பது இந்த நாமத்தின் பொருள். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழி. மலர்ந்த முகம் மகிர்ச்சியைக் கொடுக்கும். ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது புன்னகை பரிமாறிக் கொள்கிறோம். மலர்ந்த முகம் மகிழ்ச்சியையும் தொற்றவைக்கிறது. கடுகடுத்த முகத்தைக் காணும்போது இயல்பாகவே வெறுப்பு உண்டாகிவிடுகிறது.

நாம் விநாயகரை முதலில் பார்த்தவுடன் அவரது மலர்ந்த முகமும் மகிழ்ச்சியும் தென்படுகிறது. முதலில் தலையில் குட்டி ஆரம்பிக்கும்போது சொல்லும் "சுக்லாம்பரதரம்.." என்ற சுலோகத்திலும் "ப்ரசன்ன வதனம்' (மலர்ந்த முகம்) என்றுதானே பிள்ளையாரின் முகத்தை வர்ணிக்கின்றோம். "இவர் அன்பானவர், நமக்கு அருள் தருவார்" என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனந்தமாக நாம் அவருக்கு வணக்கம் தெரிவிக்கின்றோம். எனவே ஆரம்பம் நல்லதாக அமைந்துவிடுகிறது. அன்பான, ஆனந்தமான அருள்முகமுடைய விநாயகரை அவரது முகத்தை வர்ணித்தே முதல்வணக்கம் செலுத்துகிறோம். ஓம் சுமுகாய நம.

இதே சொல்லை நாம் இன்னொரு வகையில் பயன்படுத்துகிறோம். "பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றது" "அவர் சுமுகமாக உரையாடினாரா?" என்ற வகையில் நாம் நாளாந்தம் இச்சொல்லைக் கையாளும்போது இயல்பாக, மகிழ்ச்சியாக, அன்பாக என்ற பொருள்களை இங்கு காண்கிறோம்.

யாருடைய உதவியை நாம் நாடிச்சென்றாலும் அவருடைய தகுதியை நினைவூட்டி, அவரது திறமையைப் பாராட்டி, நமது தாழ்மையை வெளிப்படுத்தி அவரை மகிழ்வித்தபின்னர்தானே நமது வேண்டுகோளை விடுகின்றோம். அவ்விதமே, விநாயகரின் மலர்ந்த முகத்தைப் புகழ்ந்த அடுத்தகணமே அவர் தேவர்கள் பால் கொண்ட இரக்கத்திற்கும் அவர்களைக் காக்கவேண்டும் எனக் கருதும் கருணைக்கும் எதிரிகளை (கஜமுகாசுரன்) அழிக்கும் வீரத்திற்கும் அடையாளமாக இருக்கும் அவரது ஒற்றைத் தந்தம் அடுத்தாக வணங்கப்படுகிறது. ஓம் ஏகதந்தாய நம.

நமது வேண்டுகோளை அவர் நன்கு செவிமடுக்க வேண்டாமா? அதனால் அவரது மிகப்பெரிய, எந்தநேரமும் அசைந்துகொண்டிருக்கும் காதுகள் வர்ணிக்கப்படுகின்றன. ஓம் கஜகர்ணாய நம. (யானைக் காதை உடையவர்)

லம்போதரன் என்ற நாமம் தொங்குகின்ற மிகப்பெரிய வயிற்றை உடையவர் என்ற கருத்தையுடையது. இப்பிரபஞ்சம் யாவற்றையும் தமக்குள் அடக்கியவர் என்ற தத்துவ உட்பொருளை இந்நாமம் தருகின்றது. இவ்வாறே கபிலன் – கபில நிறமுடையவன், விகடன் – மகிழ்ச்சியைத் தருபவன். தூமகேது – புகைக்கொடியோன் (யாகங்களை – கணபதி ஹோமத்தை – விரும்பி ஏற்பவன்), பாலசந்திரன் – நெற்றியில் சந்திரனைச் சூடியவன், விக்னராஜன் – விக்கினங்களுக்குத் தலைவன் என்ற பொருள்களைத் தருகின்றன.

இங்கு பாலசந்திரன் என்ற நாமம் சந்திரனைச் சூடியிருப்பதைக் குறிப்பிடுவதன் மூலம் சிவபிரானுக்கும் தமக்கும் பேதமில்லை என்ற உயர்நிலையைக் காட்டுகின்றது. விக்னராஜன் என்பது விக்னங்களுக்குத் தலைவன் என்ற பொருள் தருவதால் ஆன்மாக்களின் வினைகளுக்கேற்ற பயன்களை அவர்களுக்கு ஊட்டுவதற்காக அடியவர்களுக்குத் தடைகள், துன்பங்களை உருவாக்குபவரும் அவரே; அனுபவித்துப் பக்குவமடைந்தபின் அவற்றைத் தகர்த்தெறிபவரும் அவரே என்ற ஆழ்ந்த தத்துவப் பொருளையும் காட்டி நிற்கிறது. கணபதி சஹஸ்ரநாமத்தில் வரும் அர்ச்சனை நாமங்களை இவ்விடத்தில் ஒப்பிட்டு நோக்கலாம்.

*ஓம் விக்ன கர்த்ரே நம - தடைகளை உண்டாக்குபவருக்கு வணக்கம்*
*ஓம் விக்ன ஹர்த்ரே நம - தடைகளை அழிப்பவருக்கு வணக்கம்.*

இங்கு முதலில் நாம் பார்த்த நாமங்கள் விக்னேஸ்வர ஷோடச நாம அர்ச்சனை எனக் கூறப்படும் பதினாறு நாமங்களாலான அர்ச்சனை மாலையில் இடம்பெறுபவை. இதேபோல இன்னுமொரு பதினாறு அர்ச்சனை மாலை உண்டு. அது விநாயகரின் பதினாறு வகையான தோற்றப்பொலிவுகளைக் கூறும் ஷோடச கணபதி நாமர்ச்சனையாக அமைகிறது.

*ஓம் பாலகணபதயே நம.*

*ஓம் தருணகணபதயே நம* என ஆரம்பிக்கும் இந்த அர்ச்சனையிலிடம்பெறும் பதினாறு வகையான விநாயக வடிவங்கள் வருமாறு: 1. பாலகணபதி 2. தருணகணபதி 3. பக்திகணபதி 4. வீர கணபதி, 5. சக்தி கணபதி, 6. த்வஜ கணபதி, 7. சித்தி கணபதி 8. உச்சிஷ்ட

⟶

கணபதி 9. விக்ன கணபதி 10. க்ஷிப்ர கணபதி 11. ஹேரம்ப கணபதி 12. லக்ஷ்மி கணபதி 13. மஹா கணபதி 14. விஜய கணபதி 15. நருத்த கணபதி 16. ஊர்த்வ கணபதி.

சிவாகம வழி வந்த இந்து விக்கிரகவியல் மரபிலும் பௌராணிக மரபிலும் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் பல்வேறு விதமான தோற்றப்பொலிவுகள் காட்டப்படுகின்றன. வெவ்வேறு விதமான புராணக் கதைகளின் அடிப்படையிலும் அடியார்களின் பல்வேறு விதமான விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் இறைவன் எடுக்கும் வடிவங்களின் அடிப்படையிலும் இவற்றுக்கு விளக்கம் கூறலாம். இத்தகைய வடிவங்கள் யாவும் அர்ச்சனைகளில் கையாளப்படுகின்றன. பெரிய அர்ச்சனைகளில் இந்த வடிவங்கள் ஆங்காங்கே குறிப்பிடப்படுகின்றன. தனித்தனியே அத்தகைய வடிவங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான அர்ச்சனைகள் உருவாக்கப்படுவதும் உண்டு.

இவ்வகையில் விநாயகப் பெருமானின் பல்வேறு விதமான தோற்றப் பொலிவுகளை முப்பத்திரண்டு கணபதி எனவும் பதினாறு கணபதி எனவும் வகைப்படுத்திப் பார்ப்பதுண்டு. அதில் பதினாறு கணபதி வடிவங்களையும் குறிப்பிட்டு அந்தந்த வடிவங்களுக்கு வணக்கம் கூறுவதாக மேற்தரப்பட்ட ஷோடச கணபதி நாமார்ச்சனை அமைகிறது.

இதற்கடுத்த நிலையில் நூற்றெட்டு நாமார்ச்சனை என்பது மிகப் பரவலாகப் பயன்படுவதாகும். விநாயகப் பெருமானுக்கு விக்னேஸ்வர அஷ்டோத்தரசதம், ககார கணபதி அஷ்டோத்தர சதம், சங்கடஹர கணபதி அஷ்டோத்தரசதம் என்ற வகையில் பல்வேறு நூற்றெட்டு நாமங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ககார கணபதி அஷ்டோத்தரசதம் என்பது எல்லா நாமங்களும் 'க' என்ற எழுத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப் பட்டதாகும். 'சங்கடஹர' என்றால் தடைகளை நீக்குதல் எனப் பொருள்படும். தடை நீக்கும்படி விநாயகரை வேண்டும் வகையில் சங்கடஹர கணபதி அஷ்டோத்தரசதம் என்ற இந்த அர்ச்சனையைப் பயன்படுத்துவர். சங்கடஹர சதுர்த்தி விரதம் இவ்வாறு தடைகளைப் போக்கி வெற்றி கிடைப்பதற்காக அனுஷ்டிக்கப்படும் விரதம் என்பதை இங்கு குறிப்பிடலாம். இந்த நூற்றெட்டு நாமங்களில் சிலவற்றை இங்கு வகைமாதிரியாகப் பார்ப்போம்.

| | |
|---|---|
| ஓம் கணபதயே நம – | கணங்களின் தலைவருக்கு வணக்கம். |
| ஓம் அம்பிகாசூனவே நம – | அம்பிகையின் மகனுக்கு வணக்கம் |
| ஓம் விக்னேசாய நம – | விக்னங்களின் தலைவனுக்கு வணக்கம் |
| ஓம் த்விரதானனாய நம– | இரண்டாவதாக உருவாக்கப்பட்ட முகத்தையுடைவருக்கு வணக்கம் (யானைத் தலை பொருத்தப்பட்ட புராணக் கதை) |
| ஓம் விநாயகாய நம – | தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாமல் தாமே யாவற்றுக்கும் தலைவராக இருப்பவருக்கு வணக்கம். |
| சம்பு புத்ர - | சிவனது புதல்வர் |
| ஸ்கந்த பூர்வஜ – | முருகனுக்கு மூத்தவர். |
| ஏகதந்த – | ஒற்றைத் தந்தமுடையவர். |
| சூர்ப்பகர்ண – | சுளகு போன்ற காதை உடையவர் |
| மூஷிகவாஹன – | எலி வாகனமுடையவர் |
| பாசாங்குச தர – | பாசம், அங்குசம் ஆகியவற்றை வைத்திருப்பவர். |

இங்கு பார்க்கின்ற பல நாமங்கள் அவரது தோற்றப் பொலிவை வர்ணிப்பதாக அமைகின்றன. இது பரவலாக அர்ச்சனைகள் யாவற்றிலும் காணப்படும் பொது இயல்பாகும். இது போல அவரது இல்பை வர்ணிக்கும் வகையிலமைந்த சில நாமங்களைக் காணலாம்.

| | |
|---|---|
| ஸர்வ கார்யாக்ர பூஜித – | எல்லாச் செயல்களின் தொடக்கத்திலும் வணங்கப்படுபவர். |
| ஸர்வ சித்திகர – | எல்லாவற்றையும் வெற்றியாக்குபவர். |
| ஸர்வலோக பூஜ்ய – | எல்லா உலகங்களிலும் வணங்கப்படுபவர் |
| ஸர்வதேவாக்ர பூஜித – | எல்லாத் தெய்வங்களுக்கும் முன்னதாகப் பூஜிக்கப்படுபவர். |
| ஸர்வ தேவமய – | எல்லாத் தேவரூபங்களையும் தம்மிடத்தில் கொண்டவர். |
| ஸர்வ வித்யாதிப – | எல்லாக் கல்விகளுக்கும் தலைவர். |

இந்த நாமங்கள் அனைத்திலும் இன்னொரு சிறப்பம்சமும் இருப்பதைக் காணலாம். இந்நாமங்கள் யாவும் ஒத்திசைக்கும் ஓசைநயமுடைய சொற்களால் அடுக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இச் சிறப்பம்சம் எல்லா அர்ச்சனைகளிலும் அவ்வப்போது கண்டின்புறக் கூடியதாக இருக்கும். 'றைமிங்' என்னும் அந்த ஒத்திசைவு நாமங்களைச் சொல்பவருக்கும் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கும்.

இன்னும் சில நாமங்கள் மிக நீண்ட நாமங்களாக அமைந்திருக்கும். இத்தகைய நாமங்கள் சஹஸ்ரநாமம் என்னும் ஆயிரத்தெட்டு நாமார்ச்சனையிலேயே அதிகம் காணப்படுமெனினும் நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் அஷ்டோத்தரசத நாமாவிலும் ஒன்றிரண்டு நாமங்களைப் பார்க்கலாம்.

| | |
|---|---|
| ஸ்வர்ண பர்வத ஸங்காச – | பொன்மலையை ஒத்த ஒளியை வீசிக்கொண்டிருப்பவர். |
| குணஸ்ரேஷ்ட க்ருபாநிதி – | உயர்குணமுடையவராகவும் கருணை நிரம்பியவராகவும் உள்ளவர். |
| யோகி ஹ்ருத் பத்ம ஸம்ஸ்தித – | யோகிகளின் இதயத் தாமரையில் குடியிருப்பவர். |

ககார கணபதி அஷ்டோத்தரமானது முன்னர் குறிப்பிட்டவாறு ககர வரியிலேயே சகல நாமங்களையும் கொண்டிருக்கும்.

| | |
|---|---|
| கணேஸ்வர | – கணங்களின் தலைவர் |
| கணநாத | – கணங்களின் தலைவர் |
| கணராஜ | – கணங்களின் தலைவர் |

இவ்வாறு ஒரே கருத்தைப் பல சொற்களில் பயன்படுத்துவதும் அர்ச்சனைகளில் காணப்படும் சொற்சிலம்பச் சிறப்பாகும்.

| | |
|---|---|
| கஜரூப | – யானை வடிவமுடையவர் |
| கஜமுக | – யானை முகமுடையவர் |
| கஜபதி | – யானைகளின் தலைவன் |

| | |
|---|---|
| குண த்ரய விபாக க்ருத | – முக்குண பேதங்களை உருவாக்குபவர். |
| குணப்ரவிஷ்ட | – குணங்களைக் கடந்தவர். |
| குணஹீன பராங்முக | – நற்குணமற்றவர்களிடமிருந்து விலகியிருப்பவர். |
| கானகம்ய | – இசைவழிச் செல்பவர் |
| கௌரீ க மனோ | |
| வஞ்சித சித்தி க்ருத | – அம்பிகயின் மனோவிருப்பத்தை நிறைவேற்றுபவர். |
| கௌரீ ஹ்ருதய நந்தன | – அம்பிகையின் மனத்தை மகிழ்விப்பவர். |
| கோ பய ப்ரிய | – பசுப்பாலை விரும்புபவர். |
| ககார பீஜ நிலைய | – 'க' என்ற அட்சரவரிசையில் நிலை கொண்டிருப்பவர். |
| க்ரஹ வந்தித | – கிரகங்களால் வணங்கப்படுபவர். |
| கர்ப்பத | – புத்திரப் பேற்றினை வழங்குபவர். |

விக்னேஸ்வர த்ரிசதி நாமார்ச்சனை என்னும் முன்னூறு நாமங்களைக் கொண்ட அர்ச்சனை நாமங்களில் சிலவற்றை நோக்கலாம்.

| | |
|---|---|
| ஓங்கார ப்ரணவ ரூப | – ஓங்காரமாகிய பிரணவ வடிவினர். |
| ஓங்கார மந்த்ர | – ஓங்கார மந்திரமாக விளங்குபவர். |
| ஓங்கார நாத | – ஓங்கார நாதமாயிருப்பவர். |
| ஸ்ரீங்கார வல்லப | – ஸ்ரீம் என்ற சௌபாக்ய பீஜ அட்சரத்தைத் தமது சக்தியாகக் கொண்டவர். |
| க்லீம் மூலாதார வாச | – க்லீம் என்ற மந்திராட்சர வடிவிலே அனைத்து ஜீவராசிகளின் மூலாதார ஸ்தானத்தில் வசிப்பவர். |
| கானவித்யா ப்ரத | – இசைஞானத்தை அளிப்பவர். |
| கண்டாநாத ப்ரிய | – மணியோசையில் விருப்பமுடையவர். |
| பர ப்ரம்ம | – மேலான பிரமமாயிருப்பவர். |
| பரமாத்மன் | – பரமாத்மாவாக விளங்குபவர். |
| பத்மாக்ஷன் | – தாமரைக் கண்களையுடையவர். |
| தருண | – என்றும் இளையவர். |
| யசஸ்வின் | – புகழுடையவர். |
| யமபீதி நிவர்த்தக | – யமபயத்தைப் போக்குபவர் |
| யதேஷ்ட வரப்ரத | – விரும்பும் வரத்தை அருள்பவர். |
| வந்தன ப்ரிய | – வணக்கம் செய்வதனால் மகிழ்பவர் |
| ஸர்வ வஸ்யகர | – யாவற்றையும் வசப்படுத்துபவர். |
| ஸர்வ சௌக்ய ப்ரத | – எல்லா சௌக்யங்களையும் தருபவர் |
| ஸர்வ துக்க விநாசன | – எல்லாத் துக்கங்களையும் களைபவர் |
| ஜலஜ லோசன | – தாமரைக் கண்ணர். (ஜல – தண்ணீர். ஜலஜ – தண்ணீரில் பிறக்கும் தாமரை லோசன – கண்) |
| நஷ்ட த்ரவ்ய ப்ரதாயக | – இழந்த பொருளை மீட்டுத் தருபவர். |
| ஹனுமத் சேவித | – ஆஞ்ஜனேயரால் சேவிக்கப்படுபவர். |
| ஹம்ச மந்த்ர ஸ்வரூப | – ஹம்ச மந்த்ர ரூபமாக இருப்பவர். |

இங்கு பார்த்த நாமங்கள் எல்லாவற்றையும் விட மிகவும் இரசனைக்குரிய நாமங்களை நாம் வின்கேஸ்வர சஹஸ்ர நாமத்தில்தான் கண்டு அனுபவிக்கலாம். ஏனெனில் அதுமிக நீண்டதாக ஆயிரம் நாமங்களைக் கொண்டதாக அமைந்திருப்பதால் அங்கு ஒரு பொருட் தொடர்சியை நாம் தேட முடியும். உவமை, உருவக, வர்ணனைச் சிறப்புக்களையும் தத்துவார்த்த உட்பொருட் சிறப்பினையும் புராணச் செய்திகளையும் ஆங்காங்கே நாம் படிக்க முடியும்.

விநாயகரது சஹஸ்ர நாமார்ச்சனையிலும் வழமையாக அதிக பயன்பாட்டிலிருக்கும் விக்னேஸ்வர சஹஸ்ர நாமம், வேதசார சஹஸ்ர நாமம், ககார கணபதி சஹஸ்ர நாமம் என்று விதவிதமான நாமாவளிகள் உள்ளன. அவற்றிலுள்ள நாமங்களை சொல்லி மகிழ நாம் தயாராகுவோம்.

# பண்ணிசைப் போட்டியும் திருக்குறள் மனனப் போட்டியும்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் ஆண்டுதோறும புண்ணி நாச்சி அம்மையார்தினம் சார்பாக நடத்தும் பண்ணிசைப் போட்டியும் திருக்குறள் மனனப் போட்டியும் எதிர்வரும் 04.02.2011 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெறும் இப்போட்டிகளில் 3, 4, 5, தரத்தினைச் சேர்ந்தவர்கள் கீழ்ப்பிரிவிலும் 6, 7, 8 தரங்களைச் சேர்ந்தவர்கள் மத்திய பிரிவிலும் 9, 10, 11 தரங்களைச் சேர்ந்தவர்கள் மேற்பிரிவிலும் பங்குபற்ற முடியும்.

பண்ணிசைப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் " பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி" எனும் பாடலை முதலிற் பாடவேண்டும்.

பிரிவுக்குரிய பாடல்கள் யாவும் மனனம் செய்திருக்க வேண்டியதுடன் அத் திருமுறைப் பாடல்கள் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கவும் வேண்டும்.

போட்டிகளில் பரிசில் பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் 19.02.2011 சனிக்கிழமையன்று சைவபரிபாலன சபையாரால் நாவலராச்சிரம மண்டபத்தில் நடத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் தின விழாவில் வழங்கப்படும்.

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

கவிஞர் திரு. இராசையா குகதாசன்

(இந்துசாதனம் – 2010 மார்கழி 20 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

396. தவத்திரு வடிவு மிக்கார் தண்டமிழு ரையைத் தங்கள்
செவிப்புலன் வழியே கேட்டு மகிழ் மகா சந்நி தானம்
அவர்க்குறு அழகு வேட மாகுகா தணிக ளெல்லாம்
இவர்திருச் செவியிற் பூட்டி இன்னருள் புரிந்திட் டார்கள்.

397. இங்கிவர் செயநெ கிழ்ந்தே இளையவச் சந்நி தானம்
தங்கழுத் தொளிரு மாறே தரிகட்டி யவைக ளாறை
பொங்குள முவகை கூர பொழியுநீ ருணர்ச்சி மேவ
அங்கவர் கழுத்திற் பூட்டி அன்பினைப் பொழிந்திட் டார்கள்.

398. இலக்கணக்கொத்தி லாங்கே யெழுந்தசந் தேகந் தீராக்
கலக்கமுற் றிருந்த சின்னச் சந்நிதா னங்கள் வேண்ட
நலத்தகு பொருளெடுத்தே நாவலர் விளக்கக் கேட்டுத்
துலக்கம தடைந்து வாங்கே தூயவர் நிவர்த்தி கொண்டார்.

399. அன்னவ ரின்ன வாறே அளிமரி யாதை யேற்ற
பின்னவர் தனக்கு ஈந்த பீடுடை கட்டி யாறும்
முன்னவர்க் கிருந்த வாறே முகமலர் வோடு சூட்டி
நன்கவர் மதிக்கு மாறு நாவல ரங்கி ருந்தார்.

400. திருப்பரங்குன்றின் பின்னர் திருவேக த்திற் கேகித்
திருப்பு வணத்தைப் போற்றிச்செழுந்திருப் பதிய தான
திருப்புத்தூர்த் தலமுஞ் சென்று திருவடி யிறைஞ்சிப் போந்து
விருப்புடை மதுரை நீங்கி வியன்குன்றக் குடிக்கு வந்தார்.

**குன்றக் குடிப் பட்டணப் பிரவேசம் (1864)**

401. அந்தநற் பதியி லண்ணா மலையாதீ னத்தைச் சேர்ந்த
சுந்தர மடப்பண் டார சந்நிதி மார்கள் வேண்ட
பந்தமுள் சித்தாந் தத்திற் பண்ணுமாட் சேபங் கட்கு
நந்தமர் விளக்க மெல்லாம் நவின்றுவங் கிருந்தார் சின்னாள்.

402. அப்படி யிருந்த வோர்நாள் அருந்தவ ரறிஞர் சேர்ந்தே
ஒப்பரி சித்தாந் தத்தி னுயர்வொடு பேணி வாழும்
இப்புவி மாந்த ரெய்தும் இகபர பயன்க ளெல்லாம்
எப்படி யாகு மென்றுள மக்கெடுத் துரையு மென்றார்.

403. விரித்துரை செய்யு மாறு வேண்டு குன்றக் குடியுள்
திருத்திகழ் பதிய தான திருவண்ணா மலையா தீன
குருத்துவ ரழைப்பை யேற்றுக் குறுகியம் மடத்திற் சேர்ந்து
அருத்தமுள் பிரசங் கத்தை ஆற்றினா ரவர்கள் தேர.

404. படித்தவர் பண்டா ரங்கள் சாஸ்திரி மார்கள் கொண்டை
முடித்துள தம்பி ரான்கள் மிளிர்சைவப் பிரபு மார்கள்
பிடித்தவை யோது வார்கள் பெரியவர் சிறிய ரெல்லாம்
துடிப்பொடு வந்தி ருந்தே துலங்குரை செவிம டுத்தார்.

405. பெய்தபல் லுரைக ளாலே பெருகுள வையந் தீர்ந்தே
மெய்தரு தொண்டர்க் கெல்லாம் மேலவ ரென்று தேர்ந்தே
வையகம் மதிக்கு மாறு நாவலர்க் குபசா ரங்கள்
செய்திட வேண்டு மென்றே திருவுளத் தெண்ணிக் கொண்டார்.

406. தவச்சைவ பிரவர்த் தாரித் தரணியில் நடந்து போக
செவிப்புலன் நுகரு நாங்கள் செல்லுதல் பல்லக் கேறி
பவச்செய லாகு மென்று பகுத்தறி தம்பி ரான்கள்
அவர்க்கெனப் பல்லக் கொன்றை ஆயத்தஞ் செய்து கொண்டார்.

407. கற்றவர் பெருமை கூறும் கட்டியத் தடிச் சிறப்பும்
கொற்றவர் வெள்ளிக் கைப்பந் தியினொடு கோணற் பொல்லும்
வற்றில வன்பர் காவு வர்ண அத் தடியும் சேர்த்தே
நற்றவத் தலைவ ரான நாவலர் முன்னே செல்ல.

408. மெய்த்தவர் தம்பி ரான்கள் மேதகு ஓது வார்கள்
வித்தக வாத்தி யங்கள் விருதுகள் பலவுஞ் சூழ்ந்து
மொய்த்திட அவரைத் தாம்செய் மிளிருமப் பல்லக் கேற்றி
பித்தின ராகிப் பட்(டி)னப் பிரவேசம் செய்திட் டார்கள்.

409. இன்புற விருந்து ஏகி எழிற்பெருந் துறைய டைந்தே
நின்றவை யிறைஞ்சித் திருவா வடுதுறை யாதீ னத்திற்
கன்புறு பணிக் ளாற்றும் கட்டளைத் தம்பி ரானார்
பன்னுப சார மேற்றும் பதிபுதுக் கோட்டை வந்தார்.

410. அங்குறு முன்னர் ராம சுவாமியும் தொண்டர் தாமும்
திங்களைச் சூடு வோன்செய் திருவிளை யாட்டி னோடு
சங்கநன் நூல்வி ருத்தி யுரையிலங் கங்கே காணும்
தங்கள்சந் தேகங் கேட்டுச் சரிவர நிவர்த்தி கொண்டார்.

411. அங்குள நாட்டுக் கோட்டை யமருவர்த் தகர்க ளெல்லாம்
தங்கள் நீண்குடித் தலத்தில் தாபிக்கும் பாபி ஷேகம்
நங்கணிற் காண நீவிர் நண்ணுமென் றிறைஞ்சி வேண்ட
அங்கவ ரழைப்பை யேற்று அந்நெடுங்குடிய டைந்தார்.

412. பரிமளம் வரவு ளார்பி ரார்த்திக்க வதனை யேற்று
எழிற்சிவன் மகிமை யோடு ஏற்றிடு வோர்கள் நாளும்
தரிசிவ சின்ன மோடு சேர்வர லாற்றை யெல்லாம்
விரிவுற வெடுத்தே யார்க்கும் விளங்கிடு மாறு ரைத்தே.

413. முடிவினில் தரிக்க வேண்டின் மாமிச முண்ண லெல்லாம்
கொடியதென் றகற்று மாறு கோமக னுரைத்தல் கேட்டுக்
கடிதினில் வீட்டுக் கேகிக் காய்ச்சுபாத் திரமு டைத்தே
அடியொடு மாமி சத்தை அருந்துதல் தமைவி டுத்தார்.

414. நெடுங்குடிப் பதியி னோடு நெஞ்சுறை யரிம ளத்தும்
நடங்கொமு நாதன் பாதம் நண்ணிடு முறையெ டுத்தே
தொடங்கவ ருரைத்த நீர்மை தெய்விக மென்றே போற்றத்
திடங்கொள வவைமு டித்தே திரும்பினார் புதுக்கோட் டைக்கே.

415. மருவுமத் தொண்ட ரோடு மகிழ்ந்துசின் னாளிலேகி
திருவுடை யானைக் காவும் திருச்சிராப் பள்ளித் தாயும்
பெருவுடை யாருள் தஞ்சைப் பெருந்தலம் வணங்கிப் போந்து
அருணிறை கும்ப கோணத் திருப்பதி வந்த டைந்தார்.

(வளரும்...)

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்
## Hindu Organ
e-mail: editor@hindu organ.com

விகிர்தி ஹூ தை மீ 1ஆம் உ (15.01.2011)


# மெய்யும் பொய்யும்

பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே

மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே

ஓம் என்னும் பிரணவத்தின் பொருளாய்–மெய்ப்பொருளின் உருவாய் – விளங்கும் விநாயகப் பெருமானைத் துதித்து, அந்த மெய்ப்பொருளின் அருளால் அதிவீரராம பாண்டியன் என்பவன் பல நூறு ஆண்டுகளின் முன்னர் பாடிய "வெற்றி வேற்கை" என்னும் நீதித் திரட்டிலுள்ள பாடல்கள் இவை என்பதையும் –

பொய் பேசுகின்ற ஒருவன் தன் பேச்சுத் திறத்தினால் அந்தப் பொய்யை, மெய் போலத் தோற்றும்படி செய்கின்றான்– மெய் பேசுகின்ற ஒருவன், பேச்சுத் திறன் இல்லாமை காரணமாக அந்த மெய்யைப் பொய் போலத் தோற்றும்படி செய்கின்றான் –

ஆகியவையே இப்பாடல்களின் தெளிவான கருத்துக்கள் என்பதையும் –

எது மெய் – எது பொய் என்பதைத் தெளிவாக அறிய முடியாத தடுமாற்றத்திலிருந்து – சிக்கலிலிருந்து – விடுபட்டு–

மெய்யின் – அடிப்படையில் தீர்ப்பை வழங்கவிருக்கும் மூன்றாமவனான நீதிவான் –

அந்த இருவருடைய சொல்லையும் ஏழு தரம் கேட்டு நன்றாக விசாரித்து – அந்த இருவரும் ஒரு மனதாக – மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் –

மனுநீதி முறைப்படி தீர்ப்பை வழங்க வேண்டும் என்பதையும்– அப்படி நடுநின்று நீதி வழங்கத் தவறுபவனை பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய முப்பெரும் தேவரும் காத்தாலும் –

நீதியைப் பெறாமல் தோற்றவன் மனம் கலங்கி அழும் கண்ணீர்–

சந்ததி சந்ததியாக அறுக்கின்ற – அறுத்துக் கொண்டே இருக்கின்ற – வாளாக மாறும் என்பதையும் விளக்குகின்ற

இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையானாகில்
மனுநெறி முறையின் வழக்கிழுந்தவர்
மனமுறை மறுகிநின் றழுதகண்ணீர் தாம்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே –

என்ற பாடலையும் வாசகர்கட்கு நினைவூட்டுவதைத் தவிர்க்க முடியாத ஒரு கடமையாகக் கருதுகின்றோம்.

சாந்த குணமும் நீதி உணர்வும் சத்திய வேட்கையும் நிறைந்த சான்றோர்கள், நிம்மதியுடனும் நேசப் பாங்குடனும் வாழ முடியாத அளவுக்கு அக்கிரமம் அட்டூழியம், அதர்மம், அராஜகம் முதலியவற்றின் "ஆள்புலமாக" இந்தப் பரந்த உலகம் சுருங்கி வருவதும் –

"மெய்" முலாம் பூசப்பட்ட பொய்மையின் எழுச்சியும் "பொய்" முடி சூடப்பட்ட மெய்மையின் தளர்ச்சியுமே அதற்கான அடிப்படை என்பதை அனுபவ ரீதியாக நாம் உணர்ந்துள்ளமையுமே அதற்குரிய காரணமாகும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது உயர்மட்ட இராஜ தந்திரமாகப் போற்றப்படுகின்றது–

அரசியல் எதிரிகளை அழித்தொழிப்பது, ஜனநாயகப் பயிர் செழித்து வளருவதற்காக மேற்கொள்ளப்படும் "களை பிடுங்குதல்" ஆகக் காட்டப்படுகின்றது –

இலங்கையின் அரசியல்– சமூக – பொருளாதாரத்துறைகளில் பாரதூரமான பாதிப்புக்களையும் – மனிதப் பேரவலங்களையும் ஏற்படுத்திய இனப்பிரச்சினையும் அதன் தொடர்பான உள்நாட்டுப் போரும் தோன்றுவதற்கு –

இந்நாட்டுத் தமிழர்கள், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வருபவர்கள் என்ற "மெய்" மறுக்கப்பட்டு – மறைக்கப்பட்டு – அவர்கள் வந்தேறு குடிகள் – கொள்ளையர் களாய் – வியாபாரிகளாய் – நாடு பிடிப்பவர்களாய் – காலத்துக்குக் காலம் இங்கு வந்து குடியேறியவர்கள் என்ற பொய்க்கு "மெய்" உருவேற்றி மேடை தோறும் அதை முழங்க வைத்ததே காரணம் என்பதையும் –

ஈராக் நாட்டிலே குழப்பங்களும் குண்டுத் தாக்குதல்களும் இன்னமும் தொடர்ந்துகொண்டிருப்பதற்கு –

தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் எதுவுமே அங்கே இல்லை என விசேட விஞ்ஞானிகள் தெரிவித்த உண்மையை மறைத்துவிட்டு –

தன் குரூர ஆசையாலும் குதர்க்க வாதத்தாலும் ஜோர்ஜ் புஷ் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளே காரணம் என்பதையும் –

உலகம் அறியும் – உயர்ந்தோர் அறிவர்.

ஆட்சிப் பதவி கொடுக்கின்ற அதிகார பலத்தைப் பயன்படுத்தி மெய்யைப் பொய்யாக்குவதையும் பொய்யை மெய்யாக்குவதையும் தம் சாதனைகளாகக் கருதிப் பெருமைப்படுபவர்களுக்கு –

முதலெழுத்துக்களை மாற்றினாலும் அவற்றின் முதற் பொருளை மாற்ற முடியாது என்ற தத்துவமும், வினை விதைத்தவன் வினை, அறுப்பான் என்ற மேலான –

மாற்ற முடியாத – மாற்றவே முடியாத – இறை நியதியும் புலனாகாமலிருப்பது அவர்களின் பேதைமை உலகின் துர்அதிர்ஷ்டம் –

எனினும்–

ஆள்பவர்கள் எத்தகைய ஆட்டங்களை ஆடினாலும் – ஆண்டவன் அருளால் நம் ஆன்றோர் வகுத்த மெய் – பொய் ஆகியவற்றின் வரம்புகளைத் தேர்ந்து – தெளிந்து –

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் – எப்பொருள் எத்தன்மைத் தாயினும் – அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு –

என்ற மெய்மையை உணர்வோம் – அந்த மெய்மைக்காய் உழைப்போம் – அந்த மெய்மையால் உயர்வோம்!

யாழ்ப்பாணம் சுழிபுரத்தைச் சேர்ந்த "நல்லைக்குமரன்" கடந்த சில ஆண்டுகளாகச் சென்னை - திருவான்மியூரில் வாழ்ந்து வருகின்றார்; தமிழ் இசை வளர்ச்சிக்குத் தன்னாலான பணிகளைச் செய்கின்றார்; "பன்னாட்டுத் தமிழ் நடுவம்" ஆதரவில் "இசைஏடு" காலாண்டிதழை வெளியிடுகின்றார். சென்னை இசைவிழா நிகழ்ச்சித் தொடரில் பொங்குதமிழ்ப் பண்ணிசை மன்றத்தில் டிசெம்பர் 19ஆம் திகதியன்றும், ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஜனவரி 1ஆம் திகதியன்றும் இவருடைய இசைக்கச்சேரிகள் இடம்பெற்றன. இந்தியக் குடியரசுத் தினத்தில் தஞ்சாவூர் முத்துத்தாண்டவர் தமிழிசை மன்றத்திற் பாடுகின்றார். நல்லூர் முருகன் பேரில் இவர் இயற்றிய பாடல், சுரதாளக் குறிப்புகளுடன் இடம்பெறுகின்றது.

# நல்லையின் நாயகன்

இராகம் : வந்தனதாரிணி
தாளம் : ஆதி

ஆ: ச ரி ம ப த ச்
அ: ச் த ப ம ரி ச

பாடல்: நல்லைக்குமரன்

### பல்லவி

நல்லையின் நாயகனே – நறுமலர்
முல்லை சூடிய முக்கண்ணன் மகனே – நல்லையின்

### அநுபல்லவி

எல்லையில் லாக் கருணை வள்ளலே உலகில்
தொல்லைவினை தீர்க்கும் திருமால் மருகனே – நல்லையின்

### சரணம்

கல்லைக் கனியாக்கும் கந்த நாதனே
கலியுக வரதனே கான கலாதரனே
இல்லை யென்றெவரும் இல்லா திருக்க
ஈந்துவக்கும் கருணைக் கடலமுதே குகனே – நல்லையின்

நல்லையின்

### பல்லவி

; த ச்ா தபா பா, ம ரிம பா/; ; ; / பாபம ரீ சா //
நல் லையின் நா . யகனே நறு. மலர்

; தசா ரிரீ ரிமபம ரீசா / : ரீ, மபா / பதபமரிமபா //
முல் லை. சூ... டிய முக் கண்ணன் ம. க. னே..

– நல்லையின்

### அநுபல்லவி

;த சா தபா தா; ச்ா ச்ா/ ச்ா தா ச்ர்ரீ / ர்ீ; ர்ீ ர்ீ. //
எல் லையில் லாக் கருணை வள். ளலே உ ல கில்
; ர்ீ, ம்ர்ீ ச்ா தா ச்ா ர்ீ / தாச்ா தாபம / ரீ மா பா //
தொல்லை வினை தீர்க்கும் திரு மா. ல் ம ரு க னே

–நல்லையின்

### சரணம்

;தா, த தா த பபா தா தா /;த த ப ம மா /பா; பா; //
கல் லைக் க னி. யாக்கும் கந் .த னே.
;பா, ப மா ரிமபம ரீ சா /;பா, மபா / பா, ம பா பா //
கலியு க வ.ர. த னே கானக லா த ர னே
;தா, ப தா ச்ா ச்ா ச்ா ச்ா /ச்ா, தா, தா /ச்ா, ச்ா, ரீ //
இல்லையென் றெவ ரும். இல் லா தி ருக் க வே
ர்ீ, ம் ர்ீ ச்ா தா; ச்ா ர்ீ /; தச்ா தபா / பமரீ சரிமப//
ஈ ந் துவக்கும் க . ருணைக் கடலமு தே.. கு. கனே

–நல்லையின்

# சைவசித்தாந்தம்

(இந்துசாதனம் – மார்கழி மாதம் 2010 – 09ஆம் பக்கத் தொடர்)

முனைவர் ஆ.ஆனந்தராசன்

**மூலகன்மம்**

**173. மூலகன்மம் என்று கூறப்படுவது யாது?**

உலகிற் காணும் காரியப் பொருள்கள் அனைத்தும் தமக்குநேராய் அமைந்த வெவ்வேறு காரணங்களை உடையனவாகும். காட்டாக, மட்குடம் என்ற காரியப்பொருள் களிமண் என்ற நேரான காரணத்தை உடையது. இவ்வாறே ஆடை, அணிகலன் முதலிய வெவ்வேறு காரியப் பொருள்கள் தமக்கு நேராய் அமைந்த வெவ்வேறு காரணங்களை உடையன வாதல் புலனாகும்.

காரியப்பொருள்கள் எண்ணற்றவை யாதலின் அவற்றிற்கு நேராய் அமைந்த காரணங்களும் எண்ணிலவாய் உள்ளன என்பது சொல்ல வேண்டாம். இந்த எண்ணிறந்த, பல்வேறுபட்ட காரணங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கியதாய்ப் பொதுப்பட நிற்கும் முடிவான ஒரு காரண நிலை உண்டு. அதுவே மாயை எனப்படுகின்றது.

காரியப்பொருள்களுக்கு, மேற்கூறியவாறு, முடிவான காரண நிலை இருத்தல் போலக் காரிய வினைகளுக்கும் முடிவான ஒரு காரண நிலை உண்டு.

வனைந்தான், உழுதான், நெய்தான், என்றாற் போல எண்ணற்ற காரிய வினைகள் நிகழ்கின்றன. இக் காரிய வினைகளின் நிகழ்ச்சிக்கு நேரே காரணமாய் – முதனிலையாய் நிற்பவை அவ்வத் தொழில்கள். உழுதான் என்ற காரிய வினைக்கு உழுதல் என்பது தொழில் முதனிலை. இவ்வாறே அவ்வக் காரிய வினைகளுக்கு அவ்வத் தொழில்களே காரணமாகிய முதனிலை யாம்.

உழவன் நிலத்தை உழும்போது உழுதல் என்ற தொழிலை அவன் அன்று புதிதாக உண்டாக்கவில்லை. உழுதல் என்ற தொழில் முதனிலை முன்பே உள்ளது. அந்தத் தொழில் முதனிலை முன்பே இல்லை என்றால் அவன் அத்தொழிலை இப்பொழுது செய்தல் இயலாது. அத்தொழில் முதனிலை என்றும் இருப்பது ஆகலின் அதனை அவன் வேண்டிய நேரத்தில் வேண்டிய வகையில் செய்கின்றான். இதுபோலவே, எல்லாத் தொழில்களும் நிகழ்த்தப்பெறுகின்றன. இதனால், எல்லாத் தொழில் முதனிலை களும் என்றும் உள்ளவை என்பது விளங்கும்.

பல்வேறு வகைப்பட்ட எண்ணற்ற இத்தொழில் முதனிலை களையெல்லாம் தன்னுள் அடக்கியதாய், பொதுப்பட நிற்கும் முடிவான முதனிலை – காரண நிலை ஒன்று உண்டு. அஃது இன்ன செயல் என்று சிறப்பாகச் சொல்ல ஒண்ணாதபடி பொதுமையாய் நிற்கும். அதுவே மூலகன்மம் எனப்படுவது.

எல்லாத் தொழில்களையும் தன்னுள் அடக்கியதாய்ப் பொதுப்பட நிற்கும் முதனிலையாகிய அது காலம், இடம் கருவி முதலியவற்றோடு கூடிச் சிறப்பு வகையில் நிகழும்போது உழுதான், வனைந்தான், நெய்தான் என்றாற் போல இஃது இன்ன செயல் என்று சிறப்பாகக் குறிப்பிட்டுச் செல்லும்படியாக நிகழும்.

இதனால் காலம் இடம் கருவி முதலியவற்றோடு கூடிச் செயற்படுவன எல்லாம் காரிய வினைகள் என்பதும், காரிய வினைகள் அனைத்திற்கும் மூலமாய் – நன்மை, தீமை முதலிய பாகுபாடுகளின்றி ஒன்றேயாய் நிற்பதாகிய மூலகன்மம் அல்லது காரண வினை என்பது உண்டு என்பதும் நன்கு விளங்கும்.

உலகிற் காணும் காரியப் பொருள்களுக்கு மூலமாகிய மாயை நுண்ணியதாய் எங்கும் பரந்திருப்பது. அவ்வாறே, உலகிற் காணும் காரிய வினைகளுக்கு மூலமாகிய காரண வினை அல்லது மூல கன்மம் எங்கும் நிற்பது.

மூலகன்மம் தனித்து நில்லாது. அதற்குப் பற்றுக்கோடு வேண்டும். வினைக்கு எவ்விடத்தும் பற்றுக்கோடாய் நிற்பது மாயையே ஆகலின் மூலகன்மம் மாயையைப் பற்றி நிற்பதாகும். மாயையைப்போல அதுவும் எங்குமாய் நிற்பதாகும்.

மாயை மூலகன்மத்தைத் தானே தன்னிடத்தில் அமைத்துக் கொள்ளவில்லை. அஃது இயற்கையாய் அதனிடத்து அமைந்துள்ள தாகும்.

எனவே, மாயையும் அநாதி; அதனிடத்துள்ள மூலகன்மமும் அநாதி, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் அநாதி என்னும் போது கன்மம் என்று குறிக்கப்படுவதுமூல கன்மமேயாகும்.

**மூல கன்மமும் காரிய கன்மமும்**

**174. மூல கன்மத்திற்கும் காரிய கன்மத்திற்கும் என்ன வேறுபாடு?**

நன்மை, தீமை முதலிய யாதொரு பாகுபாடும் தன்னிடத்து இல்லாமலும், செயலாக நிகழ்தல் இல்லாமலும் இருந்தவாறு இருத்தலாகிய நிலையே கன்மத்தின் காரண நிலையாகும். இந்நிலையிலே அதுமூல கன்மம் எனப்படும்.

பின், உயிர்கள் மாயா காரியங்களைக் கருவியாகக் கொண்டு நிகழ்கின்றபோது, கன்மம் அசைவற்ற தன் காரண நிலையின் நீங்கிச் செயல் நிலைக்கு வருகிறது; மாயா காரியங்களின் வழியே அது காரியப்பட்டு, நல்லதும் தீயதும் எனப் பாகுபட்டு, ஆகாமியம் என்றும், சஞ்சிதம் என்றும், பிராரத்தம் என்றும் பெயர் பெற்று, தோற்றம் நிலை அழிவு என்பனவற்றை எய்திக் காரிய வினை யாகிறது.

சேக்கிழார் பெருமான் ஆன்மாக்களின் நிலையைக் குறிப்பிடும்போது, ஆணவம் கன்மம், மாயை என்னும் மூன்று கற்களில் நல்வினை தீவினை என்னும் இரண்டு கயிறுகளால் பிணிக்கப்பட்டுப் பிறவிக் கடலில் தள்ளப்பட்டுள்ளன என்ற கருத்துப்பட,

'இருவினைப்பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ்மாக்கள்'

என்று உருவகப் படுத்திக் கூறியுள்ளார்.

இங்கே மூலகன்மம் ஒரு கல்லாகச் சொல்லப்பட்டுள்ளது. காரிய கன்மம் கயிறாகச் சொல்லப்பட்டுள்ளது.

மூலகன்மம் அசைவற்ற, செயலற்ற பொருள் நிலையாதலின், அதற்கு ஏற்ப அதனைத் தன் கண் செயற்பாடு இல்லாத கல்லாகக் கூறினார். காரிய கன்மம் செயற்படும் நிலையாதலின் அதனை, பிணித்தலாகிய செயலை நிகழ்த்துகின்ற கயிறாகக் கூறினார் என்ற பொருத்தம் நோக்கற்பாலது.

எனவே, மூலகன்மம் இயல்பிலே உயிர்களுக்குப் பந்தம் ஆகாது. மாயா காரியங்களின் வழியே காரியப்படும்போதுதான் உயிர்களுக்கு அது பந்தமாகும் என்பதை அறிதல் வேண்டும்.

### 6. தளை (மாயை)

**மாயையின் இயல்பு**

**175. ஆணவம், கன்மம், என்பவற்றின் பின் சொல்லுதற்கு உரியதாய் உள்ள மலம் மாயையாகும். அம் மாயை எப்படிப்பட்டது?**

குடமாகிய காரியத்திற்குக் களிமண் முதற் காரணமாதல் போல உலகமாகிய காரியத்திற்கு மூலப்பொருளாய் இருப்பது மாயை என்பதை முன்பு விளக்கியிருக்கிறோம்.

அஃது உலகத்திற்கு வித்துப்போன்றதாய், அழிவில்லாததாய், சடமாய், எங்கும் நிறைந்ததாய், அருவாய், ஆற்றல் வடிவினதாய் இருப்பது.

காணப்படும் இந்த உலகம் முழுவதும் முடிவில் அருவமாக உள்ள ஓர் ஆற்றல் வடிவாக நிற்கக்கூடியதாகும்.

மேசைமீது சிறிது தண்ணீர் சிந்திவிட்டது என்று கொள் வோம். சிலமணிநேரம் கழித்துப் பார்த்தால் சிந்திய நீர் அங்கே காணப்படாது. காணப்படாமைக்கு என்ன காரணம்? அஃது ஆவியாக மாறிக் காற்றில் கலந்துள்ளது என்பதுதான் உண்மை. அஃது அழிந்துவிடவில்லை.

இவ்வாறு எல்லாப்பொருள்களும் அருவமாகி, ஒரேவகையான ஆற்றல் வடிவத்தில் இருக்கக்கூடியவை என்று கொண்டு, அவ் ஆற்றல் உருவத்திற்குத்தான் மாயை என்ற பெயர் சைவத்தில் இடப்பட்டுள்ளது.

தூலமாய் நின்ற காரியப்பொருள்கள் படிமுறையாக ஒன்றைவிட ஒன்று சூக்குமமாய் மாறிக்கொண்டுபோகும்பொழுது முடிந்தசூக்கும நிலையே மாயை எனப்படுகின்றது.

**'மாயை' என்பதன் பொருள்**

**176. மாயை என்ற சொல்லுக்கு நேரான பொருள் என்ன?**

மாயா என்ற வடசொல் தமிழில் மாயை என வந்துள்ளது. 'மா' என்பது ஒடுங்குதல். 'யா' என்பது வருதல். எனவே உலகம் ஒடுங்குவதற்கும், மீள வருதற்கும் இடமாய் உள்ளது என்பது மாயை என்ற சொல்லின் நேர்பொருள்.

**மூவகை மாயைகள்**

**177. மாயையில் பலவகை உண்டா?**

உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளாயகலர், சகலர் என்னும் மூவகையின என்பதை முன்னே குறிப்பிட்டோம். மலப் பிணிப்பில் தம்முள் வேறுபாடு உடைய அவ்வுயிர்களுக்கு உரிய உடம்பும், கருவிகளும், நுகர்ச்சிப் பொருள்களும், வாழ் இடமும் ஆகியவை ஒன்றாயிருத்தல்கூடாது அன்றோ?

எனவே அவைகளின் பொருட்டுஅமைந்த உலகங்களும் வெவ்வேறாய், மூவகையினவாய் உள்ளன என்று கொள்ளுதலே பொருத்தமாகும். அதனால், அம் மூவகை உலகங்களையும் தோற்றுவித்தற்கு மூன்று வகையான மாயைகள் உள்ளன என்பது பெறப்படும். அவ்மூவகை மாயைகளும் முறையே சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை எனப்படும்.

**178. மாயை பல என்று கொண்டால், சடமாயும் பலவாயும் இருப்பனவெல்லாம் தோன்றி நின்று அழியும் என்னும் முறைப்படி மாயை அநித்தியப் பொருள் ஆகிவிடாதா?**

சைவ சித்தாந்தம் சுத்த மாயையும், அசுத்த மாயையும் இரண்டு தனிப் பொருள்கள் என்றுகொள்ளவில்லை. இரண்டு மாயைகளும் இரண்டு தனிப்பொருள்களே என்று கொண்டாலன்றோ, நீ கூறியபடி, அநித்தியம் என்று கூறுதற்கு இடம் ஏற்படும்.

ஒரு மாயையே சுத்தம், அசுத்தம் என இரு கூறுபட்டு நிற்கும். அஃதாவது, குன்றிமணி ஒன்றே செய்யதும் கரியதும் ஆகிய இருபகுதிபட்டதாய் விளங்குதல்போல, ஒரு மாயையே ஒரு பகுதியில் அசுத்தத்தோடு கலந்து அசுத்த மாயையாகியும், மற்றொரு பகுதியில் அசுத்தத்தோடு கலவாது தூயதாய்ச் சுத்த மாயையாகியும் நிற்பதாகும்.

எனவே, மலகன்மங்களோடு விரவாது தூய்மையாய் இருந்து இன்பத்தை மட்டுமே தருவது சுத்த மாயை. இதற்கு மாறான தன்மையுடையதாய், மல கன்மங்களோடு விரவி மயக்கத்தைச் செய்வது அசுத்த மாயை என்பது விளங்கும்.

சுத்த மாயை மேலாய் விரிந்து நிற்க, அசுத்தமாயை அதனுள் அடங்கி நிற்கும். எனவே சுத்தமாயை வியாபகமும், அசுத்த மாயை அதனுள் வியாப்பியமும் ஆகும்.

சுத்த மாயை வியாபகமாய் இருத்தலின் மகாமாயை என்றும், ஊர்த்துவ மாயை என்றும் கூறப்படும் ஊர்த்துவம் – மேல். மேல் என்பதற்கு வியாபகம் என்பது பொருள். விந்து, குடிலை, குண்டலி என்பனவும் அதன் வேறு பெயர்கள்.

அதோ மாயை, மாயை, மோகினி என்பன அசுத்த மாயையைக் குறிக்கும் பெயர்கள். அத: கீழ். கீழ் என்பதற்கு வியாப்பியம் என்பது பொருள். மயக்கத்தைச் செய்வது பற்றி அது மோகினி எனப்பட்டது. வியாபக மாயை மகா மாயை எனப்படுதலின், வியாப்பிய மாயை. மாயை என்று சொல்லப்பட்டது.

இனி, பிரகிருதி மாயை என்பது தனித்த ஒரு மாயையன்று. அஃது அசுத்த மாயையினின்றும் தோன்றிய ஒரு காரியப் பொருளேயாகும்.

சுத்த மாயையே எல்லாவற்றிலும் மேலாக, விரிந்து பரந்து நிற்பது. அதன் கீழாக, வியாப்பியமாய் அடங்கி நிற்பது அசுத்த மாயை. அசுத்த மாயையின் கீழாக வியாப்பியமாய் அடங்கி நிற்பது பிரகிருதிமாயை என அறிதல் வேண்டும்.

சுத்த மாயையும் அசுத்த மாயையும் ஒரே மாயையின் இரு பகுதிகளே ஆதலாலும், பிரகிருதி மாயை தனிமாயை ஆகாமல் அசுத்த மாயையின் காரியமே ஆதலாலும், மாயை இவ்வாறு மூன்றாகச் சொல்லப்படினும், உண்மையில் அது பொருளால் ஒன்றே என்பதுதான் சித்தாந்தத் துணிபாகும்.

உலகிற்குப் பரம நிமித்த காரணம் (இறைவன்) ஒன்றேயானாற் போலப் பரம முதற் காரணமும் (மாயை) ஒன்றாக இருத்தலே பொருத்தமுடையது ஆகையால், அம்முறையில் நோக்கினாலும் மாயை ஒன்றேயாதல் விளங்கும்.

ஆசிரியர் உமாபதிசிவம் திருவருட் பயனில் 'ஏகன் அநேகன்' என்னும் குறளில், ஒரு கருத்துப்பற்றி, மாயை இரண்டு எனக் கூறியபோதிலும், அவரே தமது சிவப்பிரகாசம் என்னும் தலையாய நூலில், மலங்களின் எண்ணிக்கையைத் தருமிடத்து 'பகர் மாயை ஒன்று' என, மாயையை ஒன்றாகவே கூறியிருத்தல் குறிப்பிடத் தக்கது.

வளரும்...

# வேத நெறி தழைத் தோங்க ! மிகு சைவத் துறை விளங்க!

கயிலை மகா முனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்

"சைவத்தின் மேற்சம யம்வே
நிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார
முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
றாளெம்மு யிர்த்துணையே!"

—சைவ எல்லப்ப நாவலர்,
திருவருணைக் கலம்பகம்.

**நம்பிக்கை**

கடவுள் என்ற சொல், இரண்டு செய்திகளை நமக்குத் தருகிறது. கடந்தது, உள்ளது; கடவி நிற்பது என்பன அச்செய்திகள், உயிருக்கு உயிராய் இருந்து இறைவன் உயிரை (ஆன்மாவை) செலுத்தி வருகிறான். யாவற்றையும் கடந்தது என்றால், அதை ஆராய்ச்சிக்கு உட்படுத்த முடியாது. ஆராய்ச்சிக்கு அப்பாற் பட்டதை, "உள்ளது" என்று சொல்ல அதிக பலம் வாய்ந்த நம்பிக்கை வேண்டும். "பரம்" என்று அதைக் குறிக்கும்போது, நம்பிக்கையின் "இருப்பு" அதிகமாகத் தேவைப்படும். "தத்துவாதீதன்" என அந்தமூல முதற் பொருளைக் குறிப்பதும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஆகும்.

**வேத உடன்பாட்டுச் சமயம்**

நம் சமயாசாரியர்கள் அருளிய எட்டுத் திருமுறைகளிலும் அந்நெறியிலேயே அமைந்த மூன்று திருமுறைகளிலும், இவை யாவற்றிற்கும் காலத்தால் முற்பட்ட திருமந்திரத்திலும் ஆகப் பன்னிரண்டு திருமுறைகளிலும் நம் சமயம் வேத உடன்பாட்டுச் சமயமாகவே சொல்லப் பெற்றுள்ளது. பன்னிரு திருமுறைகளிலு மாகச் சற்றொப்ப ஆயிரத்து இருநூறு இடங்களில், வேதங்கள் ஆகமங்கள் போற்றப்படுகின்றன. சைவ இலக்கியங்கள் சாத்திர நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்று, தொகு மொத்தமாக வைத்து எண்ணிக்கை செய்தால் இது இன்னும் பன்மடங்காகப் பெருகும்.

சமயாசாரியர்கள் மட்டுமன்றிச் சந்தானாசாரியர்கள் நால்வரும், நம் சமயத்தினருக்கு உத்தரவிடும் உரிமையுள்ளவர்கள் ஆவர். அவர்கள் நம் சமயத்தின் தத்துவங்களை – மெய்ப் பொருளியலை – மிகத் துல்லியமாக வரையறுத்து வழங்கினார்கள். இந்த வரையறை, பதின்மூன்றாம் நூற்றாண்டு முதற்கொண்டு சைவர்களுக்கு மேல் வரிச் சட்டமாக அமைந்தது. மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் இவையும் சைவத்தை வேத உடன்பாட்டுச் சமயமாகவே வரையறுத்து வற்புறுத்துகின்றன.

*வேதங்களும், மிகுவைசத் துறையாகிய சிவாகமங்களும் தழைத்தாலன்றி மானுட வர்க்கமாகிய பூதபரம்பரையும் செம்மை நெறியில் பொருந்திநிற்கமாட்டா - தருமத்தை நாம் காத்தாற்றான் தருமம் நம்மைக் காக்கும். - என்ற சிந்தனைகளின் உந்துதலில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மட அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் "வேத நெறி தழைத்தோங்க! மிகுசைவத் துறைவிளங்க!" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள கருத்துக்களை நன்றியுடன் மறுபிரசுரஞ் செய்கின்றோம்.*

கடவுளியலும், அதையொட்டிய சமயமும், சடங்கு சம்பிரதாயம், கிரியைகள், வழிபாடுகள் யாவும் நம்பிக்கை என்னும் ஆணிவேர் உடையனவே ஆகும். 'யார் சொன்னால் நம்ப வேண்டும்?" என்பதில் தெளிவு இல்லையென்றால் "நம்பிக்கை" அர்த்தமற்றதாகிவிடும். நம்பினார் கெடுவதில்லை. இது நான்கு மறை தீர்ப்பு.

"சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது"– பெறுதற்கரிய நல்லூழ் காரணமாகச் சைவமாம் சமயம் சாரப் பெற்றவர்கள் சமயம் தொடர்பான செய்திகளை யார் சொன்னாலும் நம்புவது என்ற போக்கில், எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருத்தலாகாது.

நம் சமயத்திற்கு ஆசாரியர்கள் நால்வர். அவர்கள் என்னென்ன அருளிச் செய்தார்களோ அவற்றையே சைவம் ஏற்கும்; அவர்களின் திருவாக்குகளையே உண்மைச் சைவம் நம்பும்; அவர்களின் இறை மொழிகளுக்கே சைவம் கட்டுப்படும். அவர்கள் வரைந்த கோடே நம் பற்றுக்கோடு.

நம் உயிர்ச் சைவத்தின் முன்னோர்களாகிய அரு ளாளர்கள், குருமார்கள் அத்தனைபேரும், ஆசாரியர்கள் வகுத்தளித்த பாதையை விட்டு ஓர் அடிகூட விலகி நடந்ததில்லை; விலகி நடக்க விட்டதுமில்லை. ஆகவேதான் "நால்வர் பொற்றாள் துணை" என்று ஓதி வருகிறோம்.

சைவத் திருமுறைகள், சாத்திரங்கள், அருளாளர்களின் இலக்கியங்கள், புராணங்கள் முதலியன எல்லாவற்றிலும் வேதங்கள், ஆகமங்கள் பற்றிக் கூறப்படும் செய்திகளை ஒருசேரத் திரட்டிப் பார்த்தால் கீழ்வரும் உண்மைகளை அறியலாம்:

1. நான்கு வேதங்களும் சைவத்திற்கு உடன்பாடானவை.

சைவம் ஆகம நெறியிலான செயற்பாடுகளை உடைய சமயம். வேதங்களையும் ஆகமங்களையும் நமக்காக நம்பெருமானே அருளினார். வேதம், பொது, ஆகமம், சிறப்பு.

2. மிக நுட்பமான வேதங்களை வகுத்தளித்தவர் வியாசர்.

வியாசர் அருளிய பதினெண் புராணங்களை அங்கங்கும் உள்ள முனிவர்களுக்கு எடுத்துரைத்தவர் சூத பௌராணிகர். ஆயிரம் அந்தணர்களுக்குச் சமமான அப்பெரியார் ஒரு சூத்திரர். அபிதான சிந்தாமணி காண்க.

3. சிவாகமங்கள், திருக்கோயில் அமைப்பு, இறை திருவுருவங்கள், நாட்பூசைகள், சிறப்பு வழிபாடுகள், வேள்விகள் முதலிய அனைத்தையும் கூறுவன. அவ்வாகமங்களில் வல்ல சிவாசாரியர் களே பரார்த்த வழிபாடாகிய திருக்கோயில் வழிபாடுகள் செய்ய உரியவர்கள் ஆவர்.

4. வேதங்கள் சொல்லும் இருபத்தொரு வேள்விகளும் சிவபரம்பொருளை நோக்கியே அமைவன. அவற்றில் ஏழு, பாகயக்ஞங்கள், ஊன் வேள்விகள் – அவை சிவாகமங்களில் கூறப்படவில்லை. பிற வேள்விகள் பலவும் வேறுபாடு உடையனவே.

⟶

5. வேதத்திற்கு நிருத்தம் என்னும் அங்கத்தின்வழி – வேதமொழியின் ஆதிநிகண்டின்படி – தத்தம் மொழிப் புலமைக்கேற்ப விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. வேதம் இறைவனை முற்ற உணரவில்லை; வேத சூட்சுமங்களை மனிதர்கள் யாரும் முற்ற உணரவில்லை. "வேதத்திற்குப் பொருள் அருளிய படலம்" எனத் திருவிளையாடற் புராணத்தில் வருவதைக் கொண்டு, பெருமானே தாம் அருளிய வேதத்திற்குத் தாமே பொருள் சொன்னாலொழிய வேதம் முற்ற உணர இயலாத அதி சூட்சுமமானது என அறியலாம். வேதத்திற்குப் பொருள் சொல்வதில் ஏற்பட்ட வேறுபாட்டாலேயே, பல சமயங்கள் கிளைத்தன.

6. "வேதத்தை விட்ட அறமில்லை",
வேதத்தில் சொல்லப்படாத தர்மம் வேறில்லை.

7. வேத நிந்தனை செய்வதைச் சமய விரோதச் செயலாக – மாபாதகச் செயலாகக் கருத வேண்டும். வேத நிந்தனை, வேத விரோதச் செயல்கள் செய்வோரைச் சைவம் புறப்புறச் சமயத்தினராகவே கருதுகிறது. சமணர், பௌத்தர், புறப்புறச் சமயிகள். வைணவர், ஏகான்மவாதிகள் புறச் சமயிகள். சித்தாந்த சாத்திரம் தோன்றியதற்குப் பின்னர் தமிழகத்துக்கு வந்த இசுலாமிய கிறிஸ்தவர்களைப் புறப்புறச் சமயிகளாகக் கூறலாம்.

இவை சுருக்கம். இவற்றின் அடிப்படையில், மேலும் சில தெளிவுரைகளை, இனிக் காண்போம்.

**இறைவன் அருளிய பொதுவும் சிறப்பும்**

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில்,

*"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்;*
*ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உள்ளன.;*
*நாதன் உரை அவை நாடில், இரண்டு அந்தம்*
*பேதம் அது என்னில் பெரியோர்க்கு அபேதமே"* (8–28)

என ஒரு மந்திரம் உள்ளது. இதில் "வேதம் ஆகமம் ஆகியன இறைவனால் அருளப்பட்டவை" என வருகிறது. நேர் நிரல் நிறை இலக்கணப்படி, வேதம் பொது நூல் என்றும், ஆகமம் சிறப்பு நூல் என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் அடியில் மீண்டும் "நாதன் உரை அவை" என்று தெள்ளத் தெளிவாக உறுதி செய்து அறிவித்தருளினார் திருமூல தேவ நாயனார்.

இரண்டு அந்தம், வேதாந்தம் , சித்தாந்தம். வேதத்தால் மட்டுமே இறைபணிகள் செய்யும் மார்க்கம், வேதாந்தம். அந்நெறியில் திருக்கோயில் வழிபாடுகள் மையப்படுவதில்லை. ஒரோவழி உண்டென்றாலும் அவை வேத மந்திரங்களை மட்டுமே பின்பற்றும். சித்தாந்தம் ஆகம வழிப்பட்ட வழிபாடுகளைக் கடைப்பிடிக்கும். ஆகமங்களில் வேத மந்திரங்களும் உள.

ஆகம நூல், "சைவநூல்" எனச் சித்தியார் கட்டளையாகச் சொல்கிறது. வேதநூலை "அநாதி" என்றும் சித்தியார் பிரகடனப் படுத்தியுள்ளது (சிவ.சித்.சுப.சூ.7.பா.15). சாத்திரம் என்பது கட்டளை; உத்தரவு. சைவ சமயத்தின் உத்தரவை கட்டளையை மீறுபவர்கள் சைவர்களாக நீடிக்க முடியுமா?

சிவனை வழிபடும் வேறு கிளைச் சமயத்தினருக்கு, நம் சைவத்தின் சித்தாந்தக் கட்டளைகள் இல்லை. அவர்கள் சொல்வதை, நம் சமயத்தினர் கேட்டு நம் தோத்திர – சாத்திர விதிகளை – மரபுகளை – கட்டளைகளை நாம் மீறலாகுமா?

**வேதியர் யார்?**

சைவ சமயம், "வைதிக சமயம்" எனப்படும். வைதிகம் என்ற சொல்லுக்கு "வேத சம்பந்தம் உடையது" என்பது பொருள் (காண்க – மதுரைத் தமிழ்ப் பேரகராதி. வை), வேதத்தை அருளியவன், வேதத்தை ஓதிக்கொண்டே இருப்பவன்– மறைநாவர் – வேத மொழியர் – தூமறைபாடும் வாயர் – ஆதலால் இறைவனை "வேதியன்" – "சொல்துணை வேதியன்" – என்று சமயாசாரியர் களும் உணர்ந்து உரைத்தனர்.

வேதங்களைக் குரு அனுமதியுடன் ஓதுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வேதியர் எனக் குறிக்கத் தக்கவர் ஆவர். வேதியர் என்னும் தகுதி, தொழிலால் – செயலால் வினையால் வருவதாகும். இதனால்தான் சிவாசாரியாருள் ஆகம பாண்டித்யத் துடன் வேதாத்யயனமும் செய்தவர்களைச் "சிவ வேதியர்" எனக் குறிப்பிட்டனர் நம் முன்னோர், இந்நுட்பத்தைச் சேக்கிழார் நன்கு கையாண்டுள்ளார்.

பார்ப்பனர்களாகப் பிறந்தவர்கள் வேதியராக வேண்டும். வேதம்ஓதல், வேதம் ஓதுவித்தல், வேத வேள்வி செய்தல், வேத வேள்வி செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழில்களையும் முறையாகச் செய்தல் வேண்டும். இது இலக்கணம். இதனை "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்" எனத் தொல்காப்பியம் சொல்கின்றது. இந்த ஆறினுள்ளும் "வேதவேள்வி" செய்வதி லேயே பார்ப்பனர்களின் தொழில் வெற்றி அமைகிறது. இக் கருத்தை,

*"கேள்வியால் சிறப்பு எய்தினானை*
*வேள்வியால் விறல் மிகுத்தன்று"*

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைக் கொளு விளக்குகிறது. இது பார்ப்பன வாகைத் துறையின் இலக்கணம். இத்துறை அமைந்த புறநானூற்றுப் பாடல் ஒன்றின் ஒரு பகுதியைப் பார்த்தால் இச்செய்தி மேலும் தெளிவாகும்.

*"நன்று ஆய்ந்த நீள் நிமிர்சடை*
*முதுமுதல்வன் வாய் போகாது*
*ஒன்று புரிந்த ஈர் இரண்டின்*
*ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்*
*இகல் கொண்டோர் மிகல் சாய்மார்*
*மெய் அன்ன பொய் உணர்ந்து*
*பொய் ஓராது மெய் கொளீஇ*
*மூஏழ் துறையும் முட்டின்று போகிய*
*உரைசால் சிறப்பின் உரவோர் மருக!"* (புறம்.166)

இது சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை, ஆவூர் மூலங்கிழார் விளித்த விளி.

இந்தப் புறநானூற்றுப் பாடல் பகுதியில் சிவபெருமான் "முது முதல்வன்" எனப்படுகிறார்; இறைவன் வேதம் ஓதுவதும், வேதம் அறம் ஒன்றையே மேவியது என்பதும் வருகிறது. வேதம் "முதுநூல்" எனக் குறிக்கப்படுகின்றது. வேதம் நான்கு என உரைக்கப் படுகிறது.

இப்பாடல் பகுதியில் வரும் "ஆறு" என்பது ஆறு அங்கங்களைக் குறிக்கிறது. அவையாவன: 1 வியாகரணம், 2. சோதிடம், 3. நிருத்தம், 4. சந்தம், 5. சிக்கை., 6. கல்பம்.

இப்பாடல் பகுதியில் வரும் "மூ ஏழ் துறை" என்பது, வேதம் சொல்லும் இருப்பத்தொரு வேள்விகளைக் குறிக்கிறது. அவையாவன; சோம வேள்விகள் ஏழு; அவிர் வேள்விகள் ஏழு; பாக வேள்விகள் ஏழு.

சோம வேள்விகள் ஏழாவன: 1. அக்னிஷ்டோமம்; 2. அதியக்னிஷ்டோமம்; 3. உக்தியம்; 4. சோடசி; 5. வாஜபேயம்; 6. அதிராத்திரம்; 7. அப்தோர் யாமம்.

அவிர் வேள்விகள் ஏழாவன: 1. அக்னியாதேயம், 2. அக்னி ஹோத்திரம், 3. தர்ச பூர்ண மாசம், 4. சாதுர் மாஸ்யம், 5. நிரூடபசுபந்தம், 6. ஆக்கிரயணம், 7. சௌத்திராமணி.

பாக வேள்விகள் ஏழாவன:– 1. அஷ்டகை, 2. அபார்வணம், 3.சிராத்தம், 4. சிராவணி, 5.ஆக்கிரகாயணி, 6. சைத்திரி, 7. ஆச்வயுஜி.

வளரும்...

# தவமார் தருமபுரம் ஆதீனம்

நீர்வை. தி. மயூரகிரி சர்மா

சைவத் தமிழ் உலகு மூன்று சம்பந்தர்களைக் கண்டுள்ளது. வேறுபல சம்பந்தர்களையும் இது கண்டிருக்கக் கூடும். ஆயினும் பிரபலமும் சீர்மையும் பெற்றுத் திகழ்ந்த பெருமக்கள் மூவரே.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில் உள்ள சீர்காழியில் கௌண்டின்ய குலக் கொழுந்தாகப் பிறந்து மூன்று வயதில் ஞானப்பாலுண்டு, எண்ணற்ற பாசுரங்களாற் செந்தமிழிற்கு அணி சேர்த்தவர் ஒருவர். அவரே திருஞானசம்பந்தர். இரண்டாமவர் உமாபதிசிவம் அவர்களின் ஞானசாரியராக விளங்கி, சந்தான குரவருள் ஒருவராகத் திகழ்ந்த மறைஞானசம்பந்தர். மூன்றாமவர் தருமபுரத்தில் சைவாதீனத்தை அமைத்த குருஞானசம்பந்தர். முதல் இருவரையும், அவர்கள் செய்த சைவப் பணியையும் ஒருங்கே தொடர்ந்து ஆற்றிடும் வகையில் ஒரு ஆதீன பரம்பரையை உருவாக்கிய சிறப்பு இவருக்குரியது. குருஞானசம்பந்தர், தருமையாதீனம் – பற்றிச் சிந்திப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருவில்லிபுத்தூர், பெரியாழ்வாரும் அவர் பெற்ற திருமகளான ஆண்டாளும் அவதரித்ததால் பெருமை பெற்ற ஊர். அங்கே சைவ வேளாளர் மரபில் அவதரித்த ஒரு செந்தமிழ்க் குழந்தையும் பிற்காலத்தில் அவ்வூருக்குப் பெருமை சேர்த்தது.

பிற்காலத்திற் குருஞானசம்பந்தர் என்று புகழப்பட்ட அக்குழந்தை தன் குலதெய்வமாக விளங்கிய மதுரைச்சொக்கன் திருக்கோயிலுக்குத் தனது பதினாறு வயதில் தன் தாய் – தந்தையருடன் சென்றது. அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாய் அண்ணலைப் பிரிய ஆற்றாது அங்கேயே அக் குழந்தை தங்கிவிட்டது. ஞானம் கூடி வரப் பெற்ற அந்தப் பதினாறு வயதுப் பாலகனுக்கு ஒருநாள், பொற்றாமரைக் குளத்தில் மிதந்து வந்து அவர் கரத்தில் தவழ்ந்த ஒரு பெட்டகத்தில் சிவலிங்கமாகக் காட்சி தந்தார் மதுரைச்சொக்கர். அவ்வேளை அந்தப் பாலகனுக்கு உண்டான இன்பம் அவன் வாயிலிருந்து சொக்கநாதர் கலித்துறையாகப் பிறந்தது.

திருவாரூரில் குருவைத் தேடிக் கண்டுகொண்டார் அந்த இளைஞர். குருநாதரான கமலை ஞானப்பிரகாசர் இட்ட கட்டளையை இதயத்திருத்தி, ஓரிரவில் ஒளிரும் திருவிளக்குடன் பெருமழை நடுவே நின்றார். மழையோ, காற்றோ எதுவுமே விளக்கை அணைக்கமாட்டாமல் ஒதுங்கி நின்றது. இதனைக் கண்ட குருநாதர் மிக்க காதலுடையராய் அந்த இளைஞரைத் தழுவி "குருஞானசம்பந்தர்" எனத் திருநாமம் சூட்டினார்; தருமையில் ஞானபீடம் நிறுவ ஆணையும் அருளினார்.

கி.பி. 1550 –1575 காலப்பகுதியில், இற்றைக்குக் கிட்டத்தட்ட ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் குருஞானசம்பந்தரால் நிறுவப் பெற்ற தருமபுர ஆதீனம் இன்றும் அருளொளி பரப்பி வருகின்றது.

"தருமையும் கமலையும் விரி தமிழ்க் கூடலும் திருநகராகவே
அரசு வீற்றிருந்த ...." (பண்டார மும்மணிக் கோவை)

**தொடரும் ஞானபரம்பரை**

சைவ சித்தாந்த செந்நெறி வழி ஒழுகும் தருமபுரம் ஆதீன ஞானபரம்பரை தந்த இன்னொரு சிவக்கொழுந்து குமரகுருபரர். தருமையாதீன நான்காவது பட்டம் சுவாமிகளே இவருக்கு ஞான உபதேசம் செய்தார். தருமையாதீனத்தின் வழியிலேயே காசியில் திருமடம் அமைத்ததும், அதன் வழியே இன்றைய திருப்பனந்தாள் ஆதீனம் பிறந்ததும் தனிக்கதை.

தருமையாதீனத்தில் 14வது சந்நிதானமாக விளங்கியவர் கந்தப்ப தேசிகர். இவர் காலத்தில் கடும் வறட்சி நிலவிற்று. ஆங்கிலேயர் நாட்டை ஆட்சிசெய்த அக்காலத்தில் விவசாயிகள் வரி செலுத்த இயலாமல் வருந்தினர். ஆங்கிலேய ஆளுனரிடம் தமது அவல நிலையைச் சொன்னார்கள். அவரோ, மிக ஏளனமாக,

"ஏன்? உங்கள் பிஷப் (கந்தப்ப தேசிகர்) இருக்கிறாரே, அவரிடம் சொல்லி மழை பெய்யச் செய்யலாமே..."

என்று சொல்லிவிட, அதனை அறிந்த தேசிகர்

*"சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்*
*தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் - ஐவரை வென்று*
*ஆனந்த வெள்ளத் தழுத்துவதே முக்தியெனில்*
*வானங்காள் பெய்க மழை"*

என்றுபாட, பெரும்மழை பொழிந்தது. வெள்ளம் பெருகிற்று. ஆங்கிலே ஆளுனர் பதறி ஓடி வந்து, தேசிகரிடம் மன்னிப்புக் கோரினார். பாத காணிக்கையாக, நூறு வராகன் பொன்னும் கொடுத்தார்.

தவம் – தமிழ் – தருமை என்று போற்றப்படும் தருமையாதீனம் தமிழுக்குச் செய்த பணி பெரிது. தமிழகத்தில் துறவிகள் பேரவை உருவாக்கப்பட்டபோது அதற்குத் தருமை ஆதீன சுவாமிகளே தலைவரானார். இதற்கு முன் மொழிந்தவர் குன்றக்குடி அடிகள். வழி மொழிந்தவர் யார் தெரியுமா?

காவியுடைக்குள் ஒரு கற்பூரதீபம் என்று போற்றப்படும் காஞ்சிப் பெரியவாள் காஞ்சி சங்கராச்சாரியார்..... சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய மஹா சுவாமிகள். இது பலரும் அறியாத செய்தி. அறிய வேண்டிய செய்தி. இப்படி... தருமையாதீனம் இந்து ஒற்றுமைக்கு ஓரிடமாகவும் விளங்கிவருகின்றது.

சீர்மை மிக்க இத் தருமையாதீனத்தின் 26ஆவது குரு மஹா சந்நிதானமாக இன்று விளங்குபவர் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்தப் பரமாச்சார்யார். இவ்வாதீனப் பணிகள், ஞான சம்பந்தம் மாத இதழ் – பல்கலைக் கல்லூரி – திருமுறை உரை–வேத, தேவார பாடசாலைகள் என்று விரிவுற்றுச் செல்கின்றன.

*23 ஆம் பக்கம் பார்க்க.*

பணத்தையோ வேறு எதனையுமோ சிறிதும் எதிர்பாராமல் மற்றவர்களின் நன்மையையும் மேம்பாட்டையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுவதே "தொண்டு" ஆகும். ஆலயங்களிலும், பிற பொது இடங்களிலும் இத்தகைய தொண்டுகளைச் செய்வதற்குப் பலர் முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் கட்டுரையாளர்.

# திருத்தொண்டு நெறி

- சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

இந்த மண்ணிலே பிறந்த ஒவ்வொருவரும் தாம் வாழ்வதற்கு ஏதாவதொரு தொழிலைச் செய்தே ஆக வேண்டும். உழைக்காமல் உண்பதை தண்டச் சோறு என்றே கூறுவார்கள். மூளை பலம் குறைந்தவர்களும் தங்கள் முயற்சியால் உழைப்பாளிகளாக மாறி விடுவார்கள். உற்சாகத்துடன் உழைப்பவர்களுக்கே திருமகளின் கடாட்சமும் கிடைக்கும். "முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள்" என்றே பஞ்சதந்திரமும் கூறுகிறது. எத்தகைய சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அறிவு இருந்தாலும் சோம்பேறிகளுக்கு வாழ்வில் உயர்வு இல்லை. தன்னிடம் கைப்பொருள் ஒன்றும் இல்லையே என்று சோம்பிச் சும்மா இருப்போரைக் கண்டால் அவனுடைய அறியாமையை எண்ணிப் பூமாதேவி சிரிப்பாள் என்பதை

*"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்"*

எனத் திருக்குறள் கூறுகிறது. பணத்தை எதிர்பார்த்துக் காரியங்கள் செய்வதைத் தொழில் எனவும் அப்படி எதையும் எதிர்பாராமல் பணியாற்றுவதைத் தொண்டு என்றும் அழைப்பர். மண்ணில் வாழும் மக்களாகிய நாம் தொண்டையும் தொண்டர் களையும் போற்றப் பழகவேண்டும். பெரியவற்றுள் எல்லாம் பெரியதாகத் தொண்டர்களின் பெருமையைத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

"இறைவனோ தொண்டருள்ளத்து ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே"

என்பதே ஔவையின் கூற்றும் ஆகும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனின் திருவடிகளை அடைவதற்குச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனைத் தொழுமே"

எனச் சிவஞானபோதத்தின் பன்னிரெண்டாம் சூத்திரம் கூறுகிறது.

சூரியனுடைய வெப்பத்திலும் பார்க்கச் சூரிய வெப்பத்தை தன் அகத்தே இழுத்து வைத்திருக்கும் மணலின் சூடு அதிகமாக இருக்கும். இதேபோல இறைவனின் திருவருளிலும் பார்க்க இறையருளைப் பெற்று வைத்திருக்கும் சிவனடியார்களின் அருள் உயர்வானது என்பதைப் பின்வரும் நீதி வெண்பாப் பாடல் குறிப்பிடுகிறது.

*"ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த*
*நேசரெதிர் நிற்பதரிதாமே - தேசு வளர்*
*செங்கதிர வன்முன்நின் றாலும் அவன்கிரணம்*
*தங்கு மணல் நிற்ப தரிதேகாண்"*

தொண்டர்களின் பெருமையைக் கூறும் நூலாகிய பெரிய புராணத்திற்குத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. அன்பும், பணிவும், பக்தியும், தொண்டும், தியாகமும், வீரமும் நிறைந்த சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் ஆகையால் இதனை மாக்கதை என்றும் அழைப்பர். பெரிய புராண அடியார்களிற் பலர் சிவத்தொண்டும் பசுத் தொண்டும் செய்து வந்தார்கள். செய்த பணிகள் பலவற்றையும் பலன் எதுவும் கருதாமல் ஈஸ்வர அர்ப்பணமாகவே செய்தார்கள்.

திருத்தொண்டு நெறிக்கே இலக்கணமாக வாழ்ந்த அப்பர் பெருமானின் குறிக்கோள் வாசகம் *"என்கடன் பணி செய்து கிடப்பதே"* என்பதாகும்.

வாக்காலும் வாழ்வாலும் ஒருமித்து வாழ்ந்த அப்பரடிகள் தான் செய்த திருத்தொண்டுகளைத் தனது பாடல்களிலே தந்துள்ளார். பூவும் நீரும் கொண்டு இசையோடு கூடிய தமிழ்ப் பாடல்களால் நாளாந்தம் இறைவழிபாடு செய்து வந்த நிகழ்வினை அப்பர் பெருமான்

*"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்*
*தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"*

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

அப்பர் பெருமான், தானே நடமாடும் கோயிலாகத் திரிந்தார் எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றார். இவருடைய கனிந்த உள்ளத்தில் இருந்து வந்த பாடல்கள் கல்மனத்தையும் கனிந்துருகச் செய்பவை. இவரைப் "பதிகச் செஞ்சொல் மேய செவ்வாய்" எனச் சேக்கிழார் பெருமானும் "ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாய்" என மாதவச் சிவஞான சுவாமிகளும் போற்றுகின்றார்கள்.

நாவுக்கரசர் பெருமான் கையில் உழவாரம் ஏந்திப் புல்பூண்டுகளைச் செதுக்கி ஆலயங்களில் சிவப்பணி செய்து

வந்தார். சிவக்கோலத்தோடு கண்களில் இருந்து அருவி நீர் சொரிய மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறை பணியே செய்தார். உலக மக்கள் அனைவரும் சிறப்புடன் அமைதியாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தொண்டு செய்தார் என நாவுக்கரசரின் சிவக்கோலத்தை சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திலே சித்திரிக்கின்றார்.

*மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்*
*சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே*
*சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்*
*பார்வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்*

சிவனடியார்களின் பசிப்பணி போக்குதலை உயர்ந்த அறமாகக் கொண்டு தொண்டு செய்த அடியார்கள் பலரைப் பெரியபுராணத்திலே காணலாம்.

"*மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்*"

என்ற சேக்கிழார் பெருமானின் வாக்கிற்கு இலக்கணமாகப் பல சிவனடியார்கள் செயற்பட்டார்கள். அடியவர்களுக்கு அன்னம் இடும் பணியை ஆற்றி வந்த இளையான் குடிமாறநாயனார் வறுமை வந்துற்ற போதும் தாம் செய்து வந்த திருத்தொண்டிலிருந்து வழுவவில்லை. இரவு நேரம் பசித்து வந்த சிவனடியார் ஒருவருக்கு உணவு கொடுப்பதற்காக, வயலிலே விதைத்து வந்த விதை நெல்லை எடுத்து வந்து அமுதாக்கினார். சிறு பயிராகிய பசளிக் கீரையை இருட்டிலே தடவிப் பிடுங்கிக் கறியமுதாக்கினார். பசளிக்கீரையைப் பறிக்க வந்த வரலாற்றைக் கூற வந்த சேக்கிழார் பெருமான், இளையான் குடிமாற நாயனார் பசளிக் கீரையை மட்டும் பறிக்கவில்லை. தனது பாச வினைகளையும் வேரோடு களைந்தார் என்பதைக்

"*குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்*
*பழிமுதல்பறிப்பவர் போலப் பறித்தவை கறிக்கு நல்க*"

எனக் குறிப்பிடுகின்றார்.

தொண்டர்களுக்கும் பக்தர்களுக்கும் உரிய இடமே ஆலயமாகும். மிண்டு மனத்தவர்கள் எவருக்கும் ஆலயங்களில் இடமில்லை என்பதை

"*மிண்டு மனத்தவர் போமின்கள்*
*மெய்யடியார்கள் விரைந்து வம்மின்*"

எனச் சேந்தனார் பெருமானும் திருப்பல்லாண்டில் கூறுகின்றார். இன்று நமது ஆலயங்களில் தொண்டு செய்பவர்களைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. தொழில் செய்பவர்களே மிகுதியாகக் காணப்படுகின்றார்கள். நமது சமூகமும் தொழில் செய்பவர் களுக்குக் கொடுக்கின்ற மதிப்பைத் தொண்டர்களுக்குக் கொடுப் பதில்லை. அதிகாரத்திற்கும், பணபலத்திற்கும், வெளிவேடத்திற் கும் மதிப்புக் கொடுப்பதைத் தவிர்த்து உண்மையான தொண்டர் களைப் போற்றி மதித்து வணங்குவோமாக இருந்தால் நமது ஆலயங்கள் அனைத்திலும் தெய்வீக ஒளி சிறப்பாகப் பிரகாசிக்கும்; யுத்த பூமியாக இருந்த நமது பிரதேசம் மீண்டும் சிவபூமியாக மாறும்.

## சைவத்திருமுறை சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்புக்கள்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர் வளர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் எதிர்வரும் மாசிமாதம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சைவத்திருமுறை வகுப்பு, சைவசித்தாந்த வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

**சைவத் திருமுறை வகுப்பு**

இவ்வகுப்பு 24 வகுப்புக்களை உள்ளடக்கி ஒருவருட காலம் நடைபெறும். பிரதி ஆங்கில மாதம் தோறும் முதலாம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறும் இவ் வகுப்பிலே திருமுறை பற்றிய விளக்கவுரை, விளக்கம், பண்ணிசைப் பயிற்சி ஆகியவை இடம்பெறும்.

**சைவ சித்தாந்த வகுப்பு**

இவ்வகுப்பு 24 வகுப்புக்களை உள்ளடக்கி ஒருவருட காலம் நடைபெறும். மாதத்தில் இருஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.30 தொடக்கம் 4.30 மணிவரை நடைபெறும். இதிலே சித்தாந்த சாத்திரங்கள் பண்டார சாத்திரங்கள் பயிற்றுவிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட இருவகுப்புகளும் தனித்தனியே யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெறவுள்ளன. சமயதீட்சை பெற்றோரும் மாமிச உணவை விடுத்தோரும் இவற்றிலே பங்குகொண்டு பயில முடியும்.

பயிற்சி முடிவிலே, பயின்றோருக்குச் சீர்வளர் சீர்குருமகா சந்நிதானம் அவர்களாற் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சியில் பயில விரும்புவோர் ரூபா 50/ செலுத்தி அல்லது ரூபா 5/- பெறுமதியான பத்து தபால்தலை (முத்திரை)யுடன் சுயமுகவரி எழுதிய 9" x 4" அளவுள்ள தபாலுறையை,

**இயக்குனர்,**
**சைவ சித்தாந்த, திருமுறைப் பயிற்சி மையம்**
**இல.16, ரத்தினகார இடம்** (Ratnahara Place),
Dehiwala.

***என்ற முகவரிக்கு அனுப்பி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.***

**சைவசித்தாந்த திருமுறைப் பயிற்சி மையம்**
**இயக்குனர், செ.நவநீதகுமார்**
**கொழும்பு.**
**தொலைபேசி எண்: 0779008286**

# ஒவ்வொரு நாளும் விரத நாளே

தொகுப்பு: நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை B.A.J.P

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்பது வள்ளுவர் வான்மறை. எம் வாழ்க்கையின் பயன் நாம் வாழும் முறையிலேயே தங்கியுள்ளது. வாழ்வாங்கு வாழ்தல் என்பது உடம்போடு மட்டும் தொடர்பானதல்ல. உடல் கடந்து உளம் கடந்து ஆத்மாவை நெறிப்படுத்த வேண்டும். இதற்காகவே பண்டிகை விழாக்களும், விரதங்களும் நம் மூதாதையரினரால் ஏற்படுத்தப் பட்டன. ஆத்மார்த்தமாக மனிதன் வாழத் தலைப்படுகின்றபோது அவன் மட்டுமல்ல அவனைச் சார்ந்த சமூகமுமே தூய்மையடை கின்றது.

விரதங்கள் தியான நிலையை வளர்த்து, உள்ளத்தைத் தூய்மையாக்குகின்றன. மகிழ்ச்சி ததும்பிய இன்ப நல இயல்பை ஏற்படுத்துகின்றன.

"மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுதல்" என்பது விரதத்துக்கு ஆறுமுகநாவலர் அவர்களால் கொடுக்கப்பட்ட வியாக்கியானமாகும்.

நாம் விரதங்களையும் அவை சார்ந்த பண்டிகைகளையும் மேற்கொள்வதனால் சமூகத்தில் ஒற்றுமை தழைத்தோங்கும்; உடல் உளம் தூய்மை பெறும்; ஆத்மா பரிசுத்தமடையும். எமது மக்களுக்கு இன்பம் பொங்க ஒவ்வொரு நாளும் விரதத் திருநாளாகட்டும்.

*"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்*
*செய்யும் கிரியைகள் கேளீரோ! பாற்கடலுள்*
*பையத் துயின்ற பரமன் அடிபாடி*
*நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலை நீராடி*
*மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
*செய்யாத செய்யோம் தீக்குறளை சென்றோதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
*உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்"*

– ஆண்டாள் திருப்பாவை

இனி ஒவ்வொரு நாளுக்குமுரிய விரதங்கள் பற்றிய சில செய்திகளை நோக்குவோம்.

**1. ஞாயிறு விரதம்**

இதனை ஆதிவிரதம் எனவும் கூறுவர். ஞாயிறு சூரிய பகவானுக்குரிய நாள். சூரிய அதிபதி சிவன், ஞாயிறன்று சூரிய உதயத்திற்குமுன் ஸ்நானம் செய்து, தூய வெண்ணிற ஆடையணிந்து, சூரிய நமஸ்காரம் செய்தல் வேண்டும். பின்னர் சிவன் கோயிலுக்குச் சென்று வெண்சாதப் பொங்கல் நிவேதனமும் செந்தாமரை மலர் அர்ச்சனையும் செய்து சிவ தோத்திரஞ் செய்தல் வேண்டும். நவக்கிரகங்களை வலம் வந்து சூரிய விக்கிரகத்துக்கு முன் நின்று

*"காசினி இருளை நீக்கும் கதிரொளி ஆகியெங்கும்*
*பூசனை உலகோர் போற்றி புசிப்பொடு சுகத்தை நல்கும்*
*வாசியே முடையதேர்மேல் மகாகிரி வலமாய் வந்த*
*தேசிகா எனை இரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி"*

என்ற பரிகாரத் தோத்திரப்பாடலைப் பாடவேண்டும். சூரியனுக்குப் பிடித்தமான கோதுமை தானியத்தைத் தானமாக ஏழைகளுக்கு வழங்கலாம். ஜாதகத்தில் கிரக தோஷம் உள்ளவர்கள் சூரிய திசை நடப்பவர்கள் ஞாயிறு விரதமிருந்தால் நன்மை பயக்கும். ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன் நீசம். இவர்களும் சூரிய வழிபாடு செய்தால் சுகமுண்டு. மாணிக்க மோதிரம் அணிவது நன்று.

**2) திங்கள் விரதம்**

திங்கட்கிழமை சோமவாரம் எனப்படும். திங்கள் விரதம் பற்றிய செய்திகள் சோமவார விரதத்தில் கூறப்பட்டுள்ளன. சந்திரதிசை நடக்கும் பத்தாண்டுகளும் சோமவார விரதமிருப்பது நல்லது. சந்திர தோஷமுடையவர்கள் இவ்விரதத்தினால் நன்மையடைவர். இவ்விரத நாளில் சிவன்கோயில் சென்று செவ்வரளிப் பூக்களால் அர்ச்சனை செய்து, நவக்கிரகங்களை வலம்வந்து வணங்கி, சந்திர பகவான் முன் நின்று,

*"அலைகட லதனினின்று மன்றுவந் துதித்த போது*
*கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்*
*சிலைநுத லுமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு*
*மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி"*

எனும் தோத்திரத்தைப் பாடுதல் வேண்டும். சந்திரனுக்குப் பிடித்தமான பச்சரிசி. ஏழைகட்குத் தானமாகக் கொடுக்கலாம். சந்திரதோஷக்காரர் நல்முத்தை மோதிரம் செய்து அணிந்தால் இல்லறம் சிறக்கும். இவ்விரதம் சிவபெருமானுக்குப் பெரு விருப்புடையது. சந்திரன் இவ்விரதம் இருந்ததாலேயே சிவனின் திருச்சடையில் வீற்றிருக்கும் பேறு பெற்றான் என்பர்.

**3.செவ்வாய் விரதம்:**

பிறப்புச் சாதகத்தில் செவ்வாய் தோஷமுள்ளவர்கள் செவ்வாய் நீசமடைந்தவர்கள், செவ்வாய் திசை நடப்பவர்கள் செவ்வாய்க்கிழமை விரதம் அனுட்டிக்க வேண்டும்.

அதிகாலையில் நித்திரைவிட்டு எழுந்து காலைக்கடன் முடித்து நீராடி சிவப்புநிற வஸ்திரம் தரித்து செந்நிறமான அல்லது செண்பக மலர்கள் எடுத்து அம்மன் சந்நிதி சென்று வழிபடவேண்டும். நிவேதனத்துக்குச் செந்நிறக் கனிகள் உகந்தவை. காலையில் அம்மனையும் மாலையில் முருகனையும் வணங்குவர். நவக்கிரக கூடத்தில் செவ்வாய் முன் நின்று பின்வரும் பாடலைப் பாடித் துதித்தல் வேண்டும்.

*"வசன நற்றெரியலோடு மன்னர் சபையில் வார்த்தை*
*புஜபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை*

⟶

*நிஜமுடன் அவரவர்க்கு நீணிலந்த தனிலளிக்குங்*
*குசனில மகனாம் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி"*

செம்பவளத்தினை மோதிரத்திலோ கழுத்துச் சங்கிலியிலோ அமைத்தல் நன்று இவ்விரத காரருக்கு அம்மன் அருள் கிடைக்கும்; இரத்த சம்பந்தமான நோய்களும் நீங்கும்.

**புதன் விரதம்:**

புதன் நீசமாக இருப்பவர்கள், தோஷமுள்ளவர்கள் இவ் விரதத்தை அனுட்டிக்கவேண்டும். மகா விஷ்ணுவின் அருளைப் பெற புதன்கிழமை விரதமிருப்பர். இவ்விரத அனுஷ்டிப்பால் கல்வி, ஞானம் தனம் பெருகும். வயது வித்தியாசமின்றி அனைவரும் புதன் விரதமிருக்கலாம்.

அதிகாலை நீராடி பச்சைநிற ஆடையணிந்து விஷ்ணு ஆலயம் சென்று வெண்காந்த மலர்சூடி, பச்சைப் பயறு கலந்த சர்க்கரைப் பொங்கலோடு பழம் பொரிகடலை இவற்றை நிவேதித்து விஷ்ணு பாடல்கள் பாடி வழிபட வேண்டும்.

நவக்கிரக சந்நிதியில் புதன் பகவான் முன்னின்று

*"மதனநூல் முதலா நான்கு மறைபுகழ் கல்வி ஞானம்*
*விதமுடன் அவரவர்க்கு விஞ்சைகளருள் வோன்றிங்கள்*
*சுதன்பல சுபாசுகங்கள் சுகம்பல கொடுக்க வல்லான்*
*புதன் கவிப் புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி"*

என்னும் தோத்திரப் பாடல்மூலம் தோத்திரம் செய்தல் கூடிய பலன் தரும்.

**வியாழன் விரதம்:**

குரு பகவானுக்குரியது. இதனை குருவார விரதமெனவும் கூறுவர். ஜாதகத்தில் குரு நீசமடைந்தவர்களும், வறுமையில் வாடுபவர்களும், திருமணமாகாமல் இருப்பவர்களும், குழந்தையில்லாதவர்களும் குடும்பதைப் பிரிந்து இருப்பவர்களும் இவ்விரதம் அனுஷ்டித்தால் எல்லா நலன்களும் கிட்டும் என்று கூறுவர்.

வியாழக்கிழமை ஸ்ரீராகவேந்திரர், குருவாயூரப்பன், குருபகவான் போன்ற கடவுளர்களை நினைத்து வழிபடலாம். அந்நாளில் பொன்னிற ஆடை அணிவது நலம். நவக்கிரக பீடத்தை வலம் வந்து வியாழ பகவான் முன்னின்று

*"மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க் காசான் மந்திரி*
*நறைசொரி கற்பகப் பொன் நாட்டினுக்கு அதிபனாகி*
*நிறைதனம் சிவிகை மண்ணின் வீடு போகத்தை நல்கும்*
*இறையவன் குருவியாழன் இருமலர்ப்பாதம் போற்றி"*

இத் தோத்திரத்தைப் பாடித் துதித்து வேண்டுதல் செய்தல் வேண்டும். புஷ்பராகக் கல் மோதிரம் அணிதல் நலம் தரும்.

**வெள்ளி விரதம்:**

இவ்விரதத்தைச் சுக்கிரவார விரதமென்பர். வெள்ளி – சுக்கிரன் ஒத்த நாமங்கள், சாதகத்தில் சுக்கிரன் நீசம் பெற்றிருந்தாலும் பாவக் கிரகங்களின் பார்வையினால் சுக்கிரன் பலமிழந்து காணப் பட்டாலும் இவ்விரதமிருப்பின் தொல்லைகள் யாவும் அகன்று நன்மைகள் கிடைக்கும்.

இவ்விரதம் பெரும்பாலும் சைவ சமயத்தவர் அனுஷ்டிப்பது வழக்கிலுள்ளது. ஏனைய நாட்களில் மாமிச உணவுண்டாலும் வெள்ளிக் கிழமையில் உண்ணமாட்டார்கள். முருகனையும் அம்மனையும் நோக்கித் துதிக்கும் விரதம். சிலர் கிராமக் கடவுள்களையும் வணங்குவர். சூரிய உதயத்துக்குமுன் குளித்து வெளிர்நில உடை உடுத்து கோயில் சென்று வெண்தாமரை மலர்களினால் அர்ச்சித்து வணங்குவர்.

சுக்கிர பகவானுக்கு முன் இப்பாடலைப் பாடலாம்.

*"மூர்க்கவான் சூரவாணன் முதலினோர் குருவாம் வையம்*
*காக்கவான் மழைபெய்விக்கும் கவிமகன் கனக மீவோன்*
*தீர்க்க வானவர்கள் போற்றச் செத்தவர் தமை எழுப்பும்*
*பார்க்கவான் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி"*

வைரக்கல் பொதிந்த ஆபரணங்கள் அணிந்தால் நலம் ஏற்படும். ஐப்பசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமை விரதங்கள் தனிச்சிறப்புடையனவாகும்.

**சனி விரதம்**

சனீஸ்வர பகவானுக்குரிய விரதம். சனிக்கிழமைகளில் திருப்பதி வேங்கடாசலபதி அருள் வேண்டிநிற்கும் விரதமுமாகும். சனி தோஷமுடையவர்கள் அதாவது சனி ஜாதகத்தில் நீசமாகவோ பகை வீட்டிலோ இருந்தாலும் சனிதிசை நடப்பவர்கள் அட்டமத்தில் சனி, ஏழரை நாட்டுச்சனி உள்ளவர்கள் சனி பகவானை வழிபட்டால் தோஷங்கள் நீங்கப்பெற்று தொல்லைகள் நீங்கிச் சுகம் பெறுவர். உடல் ஊனமுற்றவர்கள் – மனவளர்ச்சி குன்றியவர்கள் திருநள்ளாற்றில் ஒரு மண்டலம் தங்கி விரதம் இருந்தால் நலம் கிடைக்கப்பெறும்.

ஒங்வொரு வாரமும் சனி விரதம் இருக்க முடியாதவர்கள் புரட்டாதி மாதம் மட்டுமாவது இருக்க வேண்டும். புரட்டாதிச்சனி விரதம் விசேடமானது. சூரியன் எழுவதற்குமுன் எழுந்து ஸ்நானம் செய்து கறுப்புநிற ஆடை அணிந்து நெற்றியில் நாமக் குறியிட்டு பெருமாள் சந்திதானத்துக்குச் சென்று மனமொழி மெய்களால் வழிபாடு செய்தல் வேண்டும். சனி ஒரு திசையிலிருந்து இடம்பெயரும் சனிப் பெயர்ச்சியின்போது திரு நள்ளாற்றில் விசேட வழிபாடு நடைபெறும். துளசி, இளநீர் எடுத்துச்சென்று வணங்குதல் சிறப்புடையது. இனிப்பும் எள்ளும் கலந்து இடித்துச் செய்த கலவையைப் படைத்து காக்கைகள் உண்ணப் போடல் வேண்டும். மேலும் எள்ளைச் சிறு துணியில் கட்டி நல்லெண்ணெய் ஊற்றித் தீபம் ஏற்றவும் வேண்டும். எள்ளும் இனிப்பும் கலந்த பிரசாதம் கொடுத்தல் நலம் சிவன் கோயிலில் கருங்குவளை மலர்களால் அர்ச்சிக்கலாம். மாலையில் நவக்கிரகங்களை வணங்கி சனீஸ்வர பகவானுக்குக் கருங் குவளை மலர்மாலை சார்த்தி அவன் முன்னின்று கீழ்காணும் தோத்திரங்களைப் பாடித் துதிக்க வேண்டும்.

*"முனிவர்கடேவரேழு மூர்த்திகள் முதலினோர்கள்*
*மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமையதல் லாதுண்டோ*
*கனிவுள தெய்வம்நீயே கதிர்சேயே காகமேறுஞ்*
*சனியனே உனைத் துதிக்கும் தமியனேற்கருள் செய்வாயே"*

*"சங்கடம் நீக்கும் சனிபகவானே*
*மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்*
*சச்சரவின்றி சாகா நெறியில்*
*இச்செகம் வாழ இன்னருள் தாதா"*

வளம் தரும் வார விரதங்களை அனுஷ்டித்து நலம் பெறுவோமாக.

வட்டுக்கோட்டை , சங்கரத்தையைச் சேர்ந்த அமரர் சி. கனகநாயகம் எழுதிய இப்பாடல் 1958.12.05 "இந்துசாதனம்" இதழில் வெளியானது. அரை நூற்றாண்டு கழிந்த நிலையிலும் பாடலிலுள்ள கருத்துக்களின் பொருத்தம் கருதி இப்பாடலை மீண்டும் வெளியிடுகின்றோம்.

# நம்மிடையொருகால் வாரீரோ?

நாவலரே எங்கள் நாவலரே!
நம்மிடை யொருகால் வாரீரோ?

சைவமும் தமிழும் தளருதையா
தாமதம் இன்றிநீர் வாருமையா
தமிழினம் தலைவரை நாடுதையா!
தகுந்தவர் யாருமிங் கில்லையையா! - நா

நாத்திகம் மிகமிக வளருதையா
நாவலர் யாருமிங் கில்லையையா
நாட்டிலெம் உரிமையும் குறையுதையா
நாளிலும் பகைமையோ வளருதையா - நா

ஆலய ஒழுங்கது குறையுதையா
ஆன்ம நெறியுமோ குறையுதையா
அறநெறி வாழ்க்கையும் இல்லையையா
அவசியம் அவனியில் வாருமையா - நா

இல்லறம் தன்னையும் துறந்தீரையா
இன்னல்கள் பற்பல களைந்தீரையா!
இன்றுமே எம்மிடை வாருமையா
இங்குள்ள அல்லல்கள் தீருமையா.

*18 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

**உருக வைக்கும் உன்னதங்கள்**

கி.பி. 1715 – 1770 களில் தருமையாதீனத்திற்குச் சொந்தமான, வைத்தீஸ்வரன் கோயிலுக்கு கட்டளைத் தம்பிரானாக இருந்தவர் அட்சயலிங்கம் சுவாமிகள். அக் காலத்தில் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வருமானம் குறைவு. நிலம் குறைவு. ஒரு காளை மட்டுமே இருந்தது. அஞ்சா நெஞ்சுடைய சுவாமிகள் நுகத்தடியின் ஒரு பக்கம் காளையைப் பூட்டி, மறுபக்கம் தானே நின்று கோயில் நிலத்தை ஏர்பூட்டி உழுதார்.

இதனை அறிந்த அப்போதைய அரசன் மிக வருந்தி, இக் கோயிலுக்குப் பல உதவிகளைச் செய்தான். இன்று இவ்வாதீன மேற்பார்வையில் சுமார் 25 கோயில்கள் உள்ளன. மேற்சொன்ன வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் பல ஆயிரம் ஏக்கர் நிலமிருக்கிறது.

முக்கியமாக, திருக்கடவூர் அபிராமியம்பாள் உடனாய அமிர்தகடேஸ்வரர் கோயில், ஞான சம்பந்தரின் அவதாரத்தலமான சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், மற்றும் திருவையாறு பஞ்சநதீஸ்வரர் ஆகிய கோயில்கள் தருமையாதீனத்தின் பொறுப்பில் உள்ளவையே.

திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் தருமபுரம் ஆதீனத்திற்கும் இடையே நல்லுறவுண்டு. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இரு ஆதீனத்துடனும் தொடர்புற்றவராவார்.

அருணாசலக் கவிராயர் முதலாகப் பல்வேறு சைவத் தமிழ் ஆர்வலர்களையும் புலவர்களையும் தருமையாதீனம் பேணி வந்திருக்கிறது. இன்றைய ஸ்வாமிகளின் அருளாளுகையிலும் அது தொடர்கிறது. இந்த வகையில் இலங்கையுடனும் நேரடியாகவும், பல்வேறு நிலையூடாயும் தொடர்புடையதாக உள்ள தருமையாதீனம் மேன்மேலும் ஈழத்துச் சைவத் தமிழ் மக்களுடைய உறவை வலுப்படுத்த வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

நூலகம்

# SUN GOD OR GODDESS

*Prof. A. Sanmugadas, Ph.D. (Edinburgh)*

Sun has been regarded as either a male or a female deity in different civilizations of the world. In the Tamil literary texts of the later period, because of the Sanskriti concepts, sun was regarded as a male deity. The practice of worshipping sun as a male deity prevails even upto now. But in early Tamil texts, the terms used for sun were: ñāyiṟu (ஞாயிறு), pakalavaṉ (பகலவன்) or pakavaṉ (பகவன்). The term ñāyiṟu does not express any gender and therefore one can assume that it may refer to either a female or a male deity. But consider the term Pakavaṉ a contracted form of Pakalavaṉ used in the very first couplet of the Taniil literary text Tirukkuṟal:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

Rev. Drew and John Lazarus translate this couplet as follows "As the letter A is the first of all letters, so the eternal God is first in the world." Here the word Pakavaṉ is taken to mean 'the sun goddess'.

Scholars have pointed out about the practice of worshipping sun as goddess by a Dravidian tribe in Kerala and Tamilnadu. The Kanikkars consider 'sun' as a goddess and names it as pakavan. One may wonder the word `pakavan' having - an suffix that denotes masculine gender. It may be true. But Consider the word amman (goddess) which also seems to have the - an suffix. But we do not consider amman as a word referring to a male god. Amman is a common term used among the ordinary people referring to Goddess. In this Connection two important points must be noted here. Aryans consider the sun as a male god as Surya Bagavan. But Dravidian tribes consider it a female. Kanikkars, a Dravidian tribe, name the sun as pakavan. The same word is used by St. Tiruvalluvar in his famous couplet.

Japanese worship the sun as a female deity. Ame-Terasu - Opo-Mi-Kami is the name of the sun deity. The sun goddess is also considered as the ancestor of the imperial family of the Japanese. The Usage among Kanikkars and the usage of the term Pakavan in early Tamil text indicate that like the Japanese sun deity, Ame-Terasu-Opo-Mi-Kami, Pakavan was Considered to be a female goddess among the Tamils too.

Besides these tribal People, the entire population of Tamils worship 'sun' on the first day of the Ponkal festival. It is considered as a thanks. giving ceremony. They offter their first fruit of the cultivation. Ponkal is made. The Japanese too has the practice of making Pongal on the 15th of January which is considered as the Japanese harvest festival. It is also their New year day. Though sun goddess does not play a role in the Japanese harvest festival the Tamils make offerings to the sun on the Pongal day. Scholars believe that the ancient Tamils had contributed to the Japanese language and culture. Even the Practice of worshipping sun as female goddess might have gone from South India to Japan. Later the Sanskritic influence could have changed the practice among the Tamils.

*Edited & Published by Mr.S.Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai, No.450, K.K.S. Road, Jaffna & Printed at Harikanan Printers, No.424, K.K.S. Road, Jaffna. 15.01.2011 (1st Day of Thaiththingal). Phone: 021 222 7678*